# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. IV** **Issue 4** **July 2014**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 2 |
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 3 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 15 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . . | 17 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 19 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள். | 21 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 23 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 25 |
| **அன்னை இலக்கியம்** பார்வைகள் . . . . . . . . . . . . . . . | 31 |

**ஜீவியத்தின் ஓசை**

*புரிவது அறிவு.*
*புரிவது*
*அவசியமில்லை*
*எனப் புரிவது*
*ஞானம்.*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## இம்மாதச் செய்தி

# பிரம்மமாக விரும்பும் மனிதன் பிரம்மம்.



**ஸ்ரீ அரவிந்தம்**

## லைப் டிவைன்

கர்மயோகி

### 26. உயரும் பொருளின் அடுக்குகள்

ஜடம் திடமானது, தொட்டால் உணரக்கூடிய பொருள். இக்குணங்கள் ஜடத்தின் ஜடத்தன்மையை நமக்கு உணர்த்தும். ஜடத்தில் எதிர்ப்பு வளர்வது அதன் அம்சம். தொடு உணர்ச்சிக்கே உரியது ஜடம். திடமாக எதிர்க்கும் தன்மை பொருளுக்கு ஜடத்தன்மையை உண்மையாகத் தரவல்லது. எதிர்ப்பு வளர்ந்தால் ஜடத்தன்மை வளரும். உணரும் உருவத்தின் எதிர்ப்பு அதன் ஜடத்தன்மையை நிர்ணயிக்கிறது. அது ஜடத்தன்மை குறைந்த நிலை. அப்படியானால் உணர்ச்சிக்கு அது குறைவாகத் தென்படும். எதிர்ப்பும் குறையும். இதுவே சாதாரணமாக நாம் ஜடம் என அறிவது. இத்தன்மை பொருளின் அடையாளம். இதற்காக ஜடம் சிருஷ்டிக்கப்பட்டது. பொருள் ஜடமான நிலையை அடைகிறது. அது ஜீவியத்திற்கு தெளிவாகப் பிடிபடக்கூடிய உருவங்களைத் தரவல்லது. மனம் இவ்வுருவங்களை ஏற்கும். மனம் அதன்படி செயல்பட சம்மதிக்கும். வாழ்வும் ஓரளவு தெளிவாக இதை ஏற்கும். அது நிலையான அறிகுறி. இந்த ரூபமே அதன் செயலுக்குரியது. வேதம் கூறுவதன்படி பூமி திடம் நிறைந்த பொருளாகும். ஜடத்தத்துவத்தின் அடையாளம் பூமியின் பெயராயிற்று. எனவே தொடர்பும், தொடுவதும் புலனுக்குரிய முக்கிய அடிப்படை. ருசி, நுகர்வது, காண்பது, கேட்பது மற்ற புலன்கள். அது மறைமுகமான சூட்சும தொடர்பால் ஏற்பட்டவை. அது தொடர்ந்து சூட்சுமம் அதிகரிக்கும் அடுக்குத் தொடர், பார்ப்பவனுக்கும் பார்க்கப்படும் பொருளுக்குமுள்ள தொடர்பு அது. சாங்கியம் கூறுவதும் அதுவே. பொருளின் ஆரம்ப நிலைகள் அவை. ஆகாயம் முதல் பிருத்விவரை அவை உள்ளன. அவற்றின் குண விசேஷங்களை நாம் காண்கிறோம். அதிக சூட்சுமத்தினின்று குறைந்த சூட்சுமம்வரை தொடரும்

நிலையான வளரும் மாறுதல். உச்சியில் ஆகாயத்தின் சூட்சும கதிருண்டு. அடியில் பிருத்வி என்ற ஜடமான நிலையுண்டு. திடமான ஆரம்பக் கட்டம் அது. எனவே நாமறிந்தவற்றுள் ஜடம் முடிவானது. தூய பொருள் வளர்வதில் இப்படிக் காண்கிறது. அது அடிப்படையான பிரபஞ்ச தொடர்பு. இதுவே முதற்குரல். இது ஆன்மா இல்லை, ரூபம். செறிவை நிறைவாக்கும் ரூபமிது. இது எதிர்க்கவல்லது. நிலையான ஜட ரூபமிது. ஊடுருவ முடியாத பரஸ்பர தொடர்பு. பிரிவினை, மாறுபாடு, வேறுபாடு முடியும் கட்டம் இது. ஜடப் பிரபஞ்சத்தின் நோக்கமும், சுபாவமும் இதுவாகும். பிரிவினை சிறப்பு பெற்று செய்யும் சாதனையின் சூத்திரம் இது.

ஜடத்திற்கும் ஆன்மாவிற்குமிடையே உள்ள தொடர் அடுக்கு வளர்வது. வளரும் அடுக்கு என இருந்தால் அது ஜடம், ஆன்மாவிடையே இருக்க வேண்டும். இந்த திறமைகள் தொடர்ந்து குறையும்படி அவை அமைந்திருக்கும். அவை ஜடத்தத்துவங்களை எடுத்துக்காட்டுபவை. எதிரான குணவிசேஷங்கள் தொடர்ந்து வளர்பவையாக இருக்கும். அவை ஓர் சூத்திரமாகும். அது தூய சுய வெளிப்பாட்டின் சூத்திரமாகும். அவை ரூபத்திற்குக் கட்டுப்பட்டவை. அடுக்கு உயரும்பொழுது அது மேலும்மேலும் குறையும். சக்தி மேலும்மேலும் சூட்சுமமாக வளையும் தன்மையுடையதாகும். பரிமாறுதல், ஒன்றையொன்று ஊடுருவுதல், கிரகிக்கும் தன்மை, ஒன்றோடொன்று கலத்தல், மாறும் திறமை, திருவுருமாற்றம், ஒன்றாவது ஆகியவை தம் தீவிரத்தில் மாறுபாட்டைக் காணும். அதன் ரூபம் நிலையானதானால் அதனின்று நாம் விலகலாம். இன்றுள்ள நிலையினின்றும் நாம் விலகலாம். உடலின் ஜடத்தன்மை வற்புறுத்துதலினின்று விலகுவதாகும். அது உடலின் ஜடம் எதிர்ப்பதன் நிலை. அவ்வழி உயர்ந்த தெய்வீக நிலை அனந்தத்திலுள்ளதன் அருகே நாம் வருவோம். அது ஐக்கியம், ஆன்மா பிரிக்கப்பட முடியாது என்பதன் நிலை. ஒரு கோடியில் ஜடமான பொருளுண்டு. அடுத்த முனையில் சூட்சும பொருளுண்டு. இடையே அடிப்படை முரண்பாடு. ஜடத்தில் சித் செறிவடைந்து எதிர்க்கிறது. சித் தன்னையறியும் சக்தி.



பொருளில் தூய ஜீவியம் சுதந்திரமாக கற்பனை செய்கிறது. தன் புலனில் அதைச் செய்கிறது. பிரியாத நிலையில் நடப்பது அது. கூடவே தொடர்ந்த இணையும் பரிமாறுதலுண்டு. அதன் சக்தி அளவு கடந்து வேறுபடும் லீலையின் சூத்திரம் அது. அவை இரு துருவங்கள். அவற்றிடையே அனந்தமான அடுக்குத் தொடருண்டு.

தெய்வீக மனத்திற்கும், தெய்வீக வாழ்வுக்குமுள்ள தொடர்பை நாம் அறிய வேண்டும். புதிய சிறப்பு பெற்ற மனித ஆத்மாவின் மனம் அது. நாம் உடல். நாம் உடலில் வாழ்கிறோம். அது ஜடம் தெய்வீகமற்றதாகத் தெரிகிறது. அது முக்கியம். பொருளுக்கும் புலனுக்கும் உள்ள தொடர்பின் சூத்திரம் அது. ஜடப்பிரபஞ்சம் பொருளில் ஆரம்பிக்கிறது. அத்தொடர்பு நிலையானது. அது மட்டுமே தொடர்பல்ல. அது மட்டுமே சூத்திரமில்லை. மனமும், வாழ்வும் வேறொரு பொருளின் தொடர்பாலும் செயல்படலாம். அது புது உடலுக்குரிய சட்டங்களை ஏற்படுத்தலாம். அவை வேறாக பெரியதான பழக்கமாக இருக்கும். உடலின் பொருளே வேறாக இருக்கும். புலன் சுதந்திரமாகச் செயல்படலாம். வாழ்வுக்குரிய சுதந்திரம் அதிகப்படலாம். மனமும் அதிக சுதந்திரம் பெறலாம், பெற்று செயல்படலாம். உடல் வாழ்வுக்குரிய சூத்திரம் உண்டு. மரணம், பிரிவினை, பரஸ்பர எதிர்ப்பு இச்சூத்திரங்களாகும். உடலுக்குரிய வாழ்வின் சக்திகளிடையே எதிர்ப்பிருக்கும். அது தன்னையறியும் வாழ்வின் சக்தியே. குறுகிய புலன் செயல்படும் அரங்கமுண்டு. அரங்கத்தின் சிறு திடலுக்குரிய முடிவு அது. அது வாழ்வின் செயலின் காலமும் சக்தியுமாகும். அது இருண்ட சிதைந்த செயல். செயல் உடைந்து அடைபட்டது. அவை சூத்திரத்தின் தளைகள். அவை விலங்குடம்பை விளக்குபவை. உயர்ந்த சட்டங்கள் மீது அவை திணிக்கப்படுகின்றன. பிரபஞ்ச இயற்கைக்குரிய சட்டங்கள் இவை மட்டுமல்ல. அவை உயர்ந்த நிலைகள், உயர்ந்த உலகங்களுண்டு. புலனறிவு உடலில் செயல்படும் ரூபத்தில் அதைச் செயல்படச் செய்யலாம். அது ஜீவனின் கருவி. மனித வளர்ச்சியில் பொருளின் விடுதலை. தற்சமயம் அவை குறையுடையவை. தெய்வீக மனத்தின்

ஜடச்செயலாக அது இருக்கும். மனித உடலில் தெய்வீக வாழ்வில் ஜடம் செயல்படுவதாகும். பூமியிலும் பரிணாமம் நடக்கும். நாம் அதை தெய்வீகமான மனித உடலெனலாம். மனித உடலும் திருவுருமாறலாம். பூமாதேவி தன் தெய்வாம்-சத்தை வெளிப்படுத்தலாம்.

ஜடமான பிரபஞ்சத்திற்கு சூத்திரம் உண்டு. அதற்குட்பட்டு, ஜடத்தின் அடுக்கில் தொடர்ந்து உயரும் நிலையுண்டு. அடர்த்தியான நிலையினின்று அடர்த்தி குறைந்த நிலைக்கு அது வருகிறது. சூட்சுமம் அதிகமான நிலையினின்று சூட்சுமம் குறைந்த நிலைக்கு வரும் தொடர் அது. முடிவாக அடுக்கின் உச்சகட்டம் வருகிறோம். அது ஆகாயத்தைக் கடந்த சூட்சுமம். அது ஜடப்பொருள் அல்லது சக்தி ரூபம் பெறும் நிலை. அதைக் கடந்தது எது, அது சூன்யமில்லை. காலியிடமில்லை. பூரண சூன்யம், உண்மையான காலியிடம் என்பதில்லை. நம் அறிவைக் கடந்த நிலையிலிருப்பதை நாம் அப்படிக் கூறுகிறோம். நம் புலன்களைக் கடந்தது அது. மனத்தையும், அதிகபட்ச சூட்சும ஜீவியத்தையும் கடந்தது அந்த சூன்யம். கடந்த நிலையில் எதுவுமில்லை என்பதும் உண்மையில்லை. ஜடப்பொருளின் ஆகாய அம்சமே ஆதியும், மூலமும் என்றும் கூற முடியாது. ஜீவியம் ஜடத்தில் தன்னை இழந்தது. அது ஜீவியத்தை இழந்த தூக்கத்திலாழ்ந்துள்ளது. அதன் அசைவு ஜீவனற்றது. ஜடமும், ஜட சக்தியுமே முடிவான பலனாகும். அது தூய பொருள், தூய சக்தியின் பலன். அங்கு ஜீவியம் பிரகாசமாகத் தன்னை அறியும். அந்நிலையில் அது தன்னையுடையது. ஜடப் பொருளுக்கும் தூய பொருளுக்கும் என்ன வித்தியாசம்? ஒன்றிலிருந்து ஜடம் அடுத்ததற்கு தாவ முடியாது. ஜட இருளி-னின்று தூய ஜீவியத்திற்கு நேரடியாகப் போக முடியாது. அடுக்குகள் அவசியம். ஜட இருளின் பொருளுக்கும் சுய-நினைவுடைய சுயவீச்சுக்கும் இடையே அது உள்ளது. ஜடத்திற்கும் ஆன்மாவுக்கும் பொதுவான தத்துவமிது.

ஆத்மாவின் ஆழத்தைக் கண்டவருண்டு. அவரனைவரும் மேற்சொன்ன கருத்தை ஏற்கின்றனர். சொந்த அனுபவத்தால் ஆமோதிக்கின்றனர். சூட்சுமமான பொருளின் உருவகங்கள்



அடுக்கடுக்காகயிருப்பதை அவர்கள் கூறுகிறார்கள். அது ஜடத்தத்துவத்திற்குப் புலப்படாது. அவை பிரபஞ்சத்திற்குப் பின்னால் போகின்றன. இவ்விஷயத்திற்கு அவை சூட்சும லோகத்தில் உள்ளன. நம் ஆராய்ச்சிக்கு அது கடினம். நாம் அடிப்படையாகக் கொண்ட முறையை பின்பற்றுவோம். இவ்வடுக்கின் உருவகத்தில் ஒரு முக்கிய அம்சத்தைக் காண்போம். ஜடம், வாழ்வு, மனம், சத்திய ஜீவியமென்ற வளரும் அடுக்குத் தொடருக்கு அது இணையானது. உயர்ந்த சச்சிதானந்தத்தையும் அது தழுவும். இந்த பொருளை நாம் உயரும்பொழுது காண்கிறோம். இந்த ஒவ்வொரு தத்துவத்-தையும் அது அடிப்படையாகக் கொண்டது. வெற்றிகரமான கருவியாகிறது. பிரபஞ்ச சுயவெளிப்பாடு ஆதிக்கம் செய்ய உதவுகிறது. அவை வளரும் உயரும் அடுக்குத் தொடர்.

இது ஜட உலகம். எதுவும் இங்கு சூத்திரமாக செயல்படுகிறது. இது ஜடப்பொருளின் சூத்திரம். புலன், வாழ்வு, எண்ணம் ஆகியவை பூமாதேவியின் சக்தியால் செயல்படுகின்றன. இது முன்னோர்கள் கூறியது. இங்கு ஆரம்பித்து இந்த சட்டங்களைப் பின்பற்றுகிறோம். அடிப்படைத் தத்துவத்திற்கு நாம் நம்மை உட்படுத்துகிறோம். எது முடியுமோ அத்துடன் நிறுத்திக் கொள்கிறோம். வேறு விஷயங்களையும் ஏற்படுத்த முடியும். இந்த மாறுதலிலும் அடிப்படை சூத்திரத்தை அனுசரிக்க வேண்டும். அதன் நோக்கத்தையும் நாம் கருத வேண்டும். தெய்வீகப் பரிணாமம் அதையும் ஏற்கும். புலன் உடலுறுப்புகள் மூலம் செயல்படுகிறது. வாழ்வு நரம்பு மண்டலம் மூலம் செயல்படுகிறது. அவை உணர்ச்சிக்குரிய உறுப்புகள் மூலம் செயல்படுகின்றன. மனம் தன் செயலை முடிக்க உடலமைப்பின் அடிப்படையை நாட வேண்டும். அதற்குதவும் மனத்தின் கருவி தேவை. மனம் செயல்படுவதும் நடைமுறை செயலில் வெளிப்படும் விபரங்களை முக்கியமாகக் கருத வேண்டும். மனம், வாழ்வு, புலனுக்கு அடிப்படை சுபாவமுண்டு. அவற்றிற்கு வரம்பில்லை. புலனுக்குரிய கருவிகள் புலனுணர்வை ஏற்படுத்தவில்லை. அவை புலனுணர்வால் சிருஷ்டிக்கப்பட்டவை. பிரபஞ்ச வாழ்வு - சக்திக்கு அவசியமான

சௌகரியமிது. மூளை எண்ணத்தை உற்பத்தி செய்யவில்லை. மூளையே எண்ணத்தால் சிருஷ்டிக்கப்பட்டது. அது கருவி. இது பிரபஞ்ச மனத்திற்குரிய வசதி. தேவை என்பது முழுமை-யுடையதல்ல. அது சந்தர்ப்பத்திற்குட்பட்டது. தெய்வீக பிரபஞ்ச உறுதி செயல்படுவதன் பலனான முடிவிது. இது ஜடப்பிரபஞ்சம். புலனுக்கும் அதன் பொருளுக்கும் உள்ள தொடர்பை வரையறுக்க அது முயல்கிறது. ஜட சூத்திரம் ஒன்றை உருவாக்குகிறது. அது சித்-சக்தியின் சட்டம். அது ஜட ரூபங்களால் சிருஷ்டிக்கிறது. அவை தன்னையறியும் ஜீவன். ஆரம்ப நிர்ணயம் செய்யும் ஆக்கிரம சக்தியது. அதன் உலகில் நாம் வாழ்கிறோம். இது வாழ்வின் அடிப்படை சட்டமில்லை. நாமேற்படுத்திய வழிமுறை. ஆத்மாவின் அந்தரங்கம் பூர்த்தியாக இது அவசியம். அது ஜட உலகில் பரிணாம வளர்ச்சியால் எழ வேண்டும்.

இது அடுத்த நிலைக்குரிய பொருள். ஆரம்ப நிர்ணய அம்சம் ஆக்கிரமிக்கும். அது ரூபமோ சக்தியோ இல்லை. அது வாழ்வு தன்னையறியும் ஆசை. இந்த ஜடலோகத்தைக் கடந்த உலகம் ஒன்றுண்டு. அது சக்திலோகம். அதை அடிப்படையாகக் கொண்டது. அது தன்னையறியும் பிராண சக்தி. அது பிராணன் தேடும் சக்தி. அது ஆசையின் சக்தி, அதன் சுய வெளிப்பாடு. அது ஜட இருளின் உறுதியோ பாதாளத்தின் உறுதியோ இல்லை. அவ்வுறுதி ஜட சக்தியாகவும், சக்தியாகவுமாகும். அவ்வுலகத்திற்கு பல சுய வெளிப்பாடுகளுண்டு. அவை அவ்வுலகின் ரூபம், உடல், சக்தி, வாழ்வின் செயல், புலனின் செயல், எண்ணத்தின் செயல், வளர்ச்சி, முடிவு, சுயபூர்த்தி-யாகும். அவை ஓர் ஆரம்ப செயலால் நிர்ணயிக்கப்படும். அல்லது அது தன்னையறியும் வாழ்வு. ஜடமும் மனமும் அவற்றிற்கு உட்பட்டிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் ஆரம்பமாகும். அவற்றை அடிப்படையாக அவை கொள்ள வேண்டும். அவற்றின் சட்டம் அவற்றை வரம்பு கட்டவோ வளர்க்கவோ முடியும். அதன் பவர், திறமை, லிமிட்டும் செய்யும். அங்கு மனம் மேலும் வாய்ப்புகளைக் காணும். இருந்-தாலும் மூலமான பிராண சூத்திரத்தைக் கணக்கிலெடுத்துக்



கொள்ள வேண்டும். அது ஆசைசக்தி. அதற்கு நோக்கம் உண்டு. தெய்வீக சிருஷ்டியிடம் அது எதிர்பார்ப்பதொன்றுண்டு. அவையும் கணக்கில் வரும்.

உயர்ந்த அடுக்குகளிலும் அதுவேயுண்டு. தொடரில் அடுத்ததுண்டு. அது மனத்தின் ஆக்கிரமிக்கும் அம்சத்திற்-குட்பட வேண்டும். அதுவே மனம் நிர்ணயிக்கும் அம்சம். அதில் பொருள் சூட்சுமமானது. அது மாறக்கூடியதாக இருக்க வேண்டும். நேரடியாக மாறும் ரூபங்களை அது ஏற்கும். மனத்தால் அவை அவற்றின் மீது திணிக்கப்படும். அதன் செயலுக்குட்பட வேண்டும். இந்த அவசியத்திற்கு அவை உட்பட வேண்டும். தன்னை வெளிப்படுத்திப் பூரணம் பெற இது அவசியம். புலனுக்கும் பொருளுக்கும் தொடர்புண்டு. அதற்கும் தொடர்புள்ள சூட்சுமம் உண்டு. அதுவும் மாறக் கூடியது. அதையும் நிர்ணயிக்க வேண்டும். அவை உடலுறுப்-பால் நிர்ணயிக்கப்படவில்லை. அவற்றிற்கு ஓர் உடலாலான பொருளுண்டு. அதற்கு மனமுண்டு, சூட்சுமப் பொருளுண்டு. அதனிடம் வேலை செய்கிறது. அப்படிப்பட்ட உலகின் வாழ்வு மனத்திற்கு அடிமைப்பட வேண்டும். பலஹீனமான நம் மனத்தின் செயல்பாடுகள் அறிய முடியாதவை அவை எனலாம். நம் உயிரின் திறமைகட்கு அளவுண்டு, முரட்டுத்தனமானது, எதிர்ப்பவை. நாம் அவற்றைப் போதுமான அளவு புரிந்து கொள்வதில்லை. அங்கு மனம் ஆதிசட்டம் என அதிகாரம் செய்கிறது. அதன் நோக்கம் நிறைவேறுகிறது. அதன் தேவைகள் சட்டப்படி மற்ற அனைத்தையும் மீறும். அது தெய்வீக சிருஷ்டியின் சட்டம். உயர்ந்த நிலையில் சத்திய ஜீவியம் உண்டு. அதன் சட்டம் தீண்டுபவை இடைப்பட்டவை. மேலும் உயர்ந்த நிலையில் தூய ஆனந்தமுண்டு. மேலும் தூய தன்னையறியும் பவர் உண்டு. மனத்தை முக்கிய சக்தியாக இருப்பதை மாற்றி தூய ஜீவனுண்டு. பிரபஞ்ச வாழ்வின் உலகமவை. பழம் வேத ரிஷிகள் அவற்றை ஜோதிமயமான தெய்வீக வாழ்வென்றனர். அமரத்துவத்தின் அஸ்திவாரம் அவை. பிற்கால இந்திய தத்துவம் அவற்றை பிரம்ம லோகம், கோலோகம் என்றனர். அவர்கட்கு அவை ஜீவனின் சுப்ரீம்

சுயவெளிப்பாடாகும். உயர்ந்த சிறப்பில் ஆத்ம வெளிப்பாடு புருஷ ஜீவனாவதாகும். அங்கு அனந்தமும் சாஸ்வதமான தெய்வலோக அனந்த ஆனந்தமாக அவை சொந்தமாகின்றன.

இந்த உயரும் அடுக்குகள் எப்படி ஜட வாழ்வைப் பாதிக்கும். ஒவ்வொரு லோகமும் அடுத்ததினின்று பிரிக்கப்பட்டிருந்தால், பாதிப்பு இருக்காது. ஒன்று ஜீவிய லோகம். அடுத்தது வாழ்வு செயல்படும் உலகம். பொருள் அடுக்குகளாக உள்ளது. அவை பிரபஞ்ச சக்தியின் அடுக்குகள். ஒவ்வொன்றையும் முந்தையதினின்றும், பிந்தையதினின்றும் பிரிக்கலாம். எதிரானது உண்மை. ஆத்ம சிருஷ்டி சிக்கல் போன்ற சிறப்புடைய நெசவு. அவை கணக்கிடப்பட்டு, சட்டமாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தத்துவமும் அத்தகையதே. மற்றவையெல்லாம் ஆன்மீக முழுமையாக ஓர் லோகத்துள் வருகின்றன. நம் உலகம் ஜட உலகம், மற்ற உலகங்களால் ஏற்பட்ட லோகமிது. எல்லா தத்துவங்களும் ஜடத்துள் வந்துள்ளன. ஜட உலகம் அப்படி ஏற்பட்டது. நாம் ஜடம் என்பது அணுக்களாலானது. ஒவ்வொன்றும் மற்ற அனைத்தையும் உட்கொண்டது. இரகஸ்யமாக செயல் நடக்கிறது. நாம் அதைக் கண்டுள்ளோம். ஒவ்வொரு கணமும் நடப்பவற்றுள் அது கலந்துள்ளது. ஜடமே சிருஷ்டியின் முடிவும் முத்திரையுமாகும். எனவே அதுவே பரிணாமத்தின் முதல்படி. இந்த எல்லா பவர்களும் ஜட வாழ்வில் கலந்துள்ளன. இந்த லோகங்கள், அடுக்குகள் அப்படிப்பட்டவை. அனைத்தும் பரிணாம எழுச்சிக்குரியவை. இதுவே சத்திய ஜீவியப் பரிணாமத்திற்குக் காரணம். அது உயர்ந்த ஆன்மீகப் பரிணாமங்களை பரிணாம வளர்ச்சியால் எழுப்புகிறது. அக்காரணத்தால் ஜட ஜீவன் ரசாயனப் பொருள் வாயுவுடன் முடிவதில்லை. உடலுக்குரிய ஜட சக்தியும், சலனமும் சூரியன், பூமியை பரிணாமத்தால் சிருஷ்டிக்கிறது. ஜட உலகிற்கு அதைக் கடந்த உலகினின்று பரிணாம வேகம் வருகிறது. அது கீழுலகங்களை அவற்றுள் உள்ள பவர், தத்துவங்களை வெளிக்கொணர வற்புறுத்துகிறது. அது இல்லாவிட்டால் ஜட சூத்திர இறுக்கத்துள் அவை சிறைப்பட்டுத் தூங்கும். அவை அங்குள்ளது விடுதலை பெற வேண்டும் எனக் கூறுகிறது. இது



கீழிருந்து எழும் அவசியம். இதன் உறவுள்ள மேலிருந்து வரும் சக்தி இதற்குப் பேருதவியாக உள்ளது.

பரிணாமம் இங்கு முடியவில்லை. இது சிறு ஆரம்ப வாழ்வின் உருவம். வாழ்வு, மனம், சத்திய ஜீவியம், ஆத்மாவாலானது இது. ஜடம் மேலுள்ள சக்திகட்கு விட்டுக் கொடுத்தது இது. ஜடத்தின் பவருக்கு விட்டுக் கொடுக்க விருப்பமில்லை. அவை பரிணாம வளர்ச்சி பெறுகின்றன. வளரும்பொழுது அவை விழிப்புறுகின்றன. சுறுசுறுப்பாகி அவை தம் ஆர்வத்தையே சுறுசுறுப்பாக்கிக் கொள்கிறது. ஆர்வமான சுறுசுறுப்பின் வித்துக்கள் விபரம் தேடுகின்றன. அவற்றை மேலிருந்து சக்தி உந்துகிறது. இது பெருநிலைகட்குரியது. இது பெருவாழ்வில் உள்ளடங்கிய சக்தி. உலகுடன் உயிருள்ள தொடர்புடையவை இவை. பரஸ்பர தொடர்பாலும் இது நடக்கிறது. அவற்றுடைய வலியுறுத்தலும் வற்புறுத்தலாகின்றன. பவரும் பலனும் வளர்கின்றன. இத்தத்துவங்கள் கீழிருந்து சிருஷ்டியாக வெளிப்படுகின்றன. அது மட்டுமல்ல. இந்த வெளிப்பாடு அளவுக்கும் தரத்திற்கும் உட்பட்டது. இது மேலிருந்தும் வருகிறது. மேலிருந்தும் கீழ்நோக்கி அவை வருகின்றன. அதனுக்குரிய பவர் என்ற முத்திரையை அதிகாரமாய்த் தாங்கி வரும். ஜட ஜீவனில் முழு மலர்ச்சியின் வாய்ப்பை ஏற்ற செயலது. இயற்கையான பிராணி விரிந்து விளங்கும் லீலைக்குள் வலிந்து வர வேண்டும். ஜடத்தின் செயல்களில் விரிந்த லீலையிது. அவற்றிற்குத் தேவையான பொருத்தமான பரிசுத்தம் நிறைந்த அரங்கம். அது கருவியாகவும் கருவின் வாய்க்காலாகவுமாகும். அதை உடல் தரும். வாழ்வும் ஜீவியமும் உடனுறையும்.

உடலும், வாழ்வும், ஜீவியமும் ஜடமான உடலால் அளவுக்குட்படுத்தப்படும். அவற்றின் வாய்ப்புகள் அளவை அறிய வேண்டி வரும். நம் புலன்களால் அவற்றை மட்டுமே ஏற்க முடியும். நம் ஜட மனப்பான்மை அதை மட்டும் ஏற்கும். அது பரிணாமத்தின் போக்கை குறுக்கி விடும். நம் இன்றைய சாதனைகள் பரிணாமத்தின் எல்லையை நிர்ணயித்து விடும். மனிதன் தனக்கேயுரிய பெருமை வெளிப்படும்படி எதையும் சாதிக்க இயலாது. ஆனால் உடலே நம் முழு ஜீவனில்லை.

புராதன காலத்து சூட்சும ஞானம் அதை விஞ்ஞானமாகக் கண்டது. உடல் நம் முழுமையான உடலின் ஜீவனுமாகாது. கனத்த ஜடம் நம் பொருள் முழுவதையும் தழுவாது. வேதகாலத்து ஞானத்தில் மிகப் பழமையானது நம் ஜீவனின் ஐந்து நிலைகளை அறியும். அவை ஜடம், பிராணன், மனம், இலட்சியம், ஆன்மீகம் அல்லது அழகுணர்வின் ஆனந்தம். நம் ஆத்மாவின் இதற்குரிய நிலைகட்குப் பொருத்தமான பொருளின் நிலையுண்டு. பண்டைய காவிய மொழி அவற்றை லோகம் என்றது. மனம் தத்துவமாகி அந்த ஞானம் வளர்ந்தது. அது பஞ்ச லோகங்களை மூன்று உடல்களாக விவரித்தன. ஜட, சூட்சும, காரண தேகங்கள் எனப்படும். ஆத்மா அவற்றுள் ஒரே சமயத்தில் இடம் பெற்றுள்ளது. இங்குமங்கும் மேலெழுந்த-வாரியாக அவை ஜடமான உடலை மட்டும் அறியும். மற்ற உடல்களையும் அறிய முடியும். அவற்றிடையே உள்ள திரையை விலக்குவதாக அது அமையும். அவை நம் பர்சனா-லிட்டிகள். உடலுக்கும், சைத்தியத்திற்கும் உடையவை. நாம் காணும் சைத்திய, சூட்சும நிகழ்ச்சிகட்கு அவை காரணம். இன்று அவற்றை உலகம் ஓரளவு ஏற்கிறது. பரிசீலனை செய்கிறது. ஏராளமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஹடயோகி-யும், தந்திர யோகியும் நெடுநாள் முன் இந்த லோக ஞானத்தை விஞ்ஞான அடிப்படையில் அறிவர். இது மனித வாழ்வின் உயர்ந்த அம்சம். உடலும் அதனுள் உண்டு. அவர் ஆறு சக்கரங்களைக் கண்டனர். அவை கனத்த உடலில் உண்டு. அவை அந்த ஆறு சக்கரங்களுக்குரியவை. சூட்சும உடலின் மனமான கருவிகள். சூட்சும உடற்பயிற்சியை அவர் அறிவர். இன்று மூடியுள்ள சக்கரத்தை அவர்களால் திறக்க முடியும். மனிதனுக்குரிய சூட்சும வாழ்வின் உயர்ந்த சைத்திய வாழ்வாகும். இலட்சியத்தை எதிர்க்கும் வாழ்வின் தடைகளை-யும் ஜடமான தடைகளையும் அதனால் தகர்க்க முடியும். ஹடயோகி கூறும் ஒரு பெரிய பலன் உண்டு. அது முக்கிய-மானது. பலவகையால் அதை சோதனை செய்துள்ளனர். அது உடலின் வாழ்வு சக்தியை கண்ட்ரோல் செய்வது. பொதுவான சட்டங்களினின்று அவற்றை விடுவிக்கும் முறை. நாமறியும்



விஞ்ஞானம் இந்த சட்டங்களை உடலினின்றோ, வாழ்வி-னின்றோ பிரிக்க முடியாது என நினைத்திருந்தனர்.

இந்த சொற்கள் பண்டைய சைத்திய-உடல் விஞ்ஞானமாகும். அவற்றுள் நம் ஜீவனின் ஒரு பெரிய கருத்தும் சட்டமும் உண்டு. இந்த ஜடப்பரிணாமத்தின் பவராக நம் ரூபம், ஜீவியம் விளங்குகின்றன. அவை ரூபத்தின் தற்காலிக நிலைகள். அவற்றின்பின் உண்மையான பெரிய பெருவாழ்வு இருக்க வேண்டும். இது அதன் புறவிளைவு. இது உடல் அறியும் அம்சமாகும். இது புவியின் அடிப்படை, ஆரம்பநிலை. விழிப்பில் நம் மன நிலை உண்மையானது. ஜீவியத்தின் பரந்த நிலைகளுண்டு. அவை பரமாத்மா, பாதாளமாகும். ஏதோ ஒரு சமயம் வழக்கத்திற்கு மாறாக நாம் அவற்றை அறியும் நேரமுண்டு. நம் ஜீவன் ஜடமான உடலம்சமுள்ளது. அதன்பின் சூட்சுமமான அடுக்குகளில் பொருளுண்டு. அவற்றிற்கு நுட்பமான சட்டமும் பெரும் பவரும் உண்டு. அவை கனத்த உடலுக்கு ஆதரவு. இந்த சூட்சும அடுக்குகளின் ஜீவியத்தின் வீச்சினுள் நாம் நுழையலாம். அவை தங்கள் பவரும் சட்டமும் கனத்த நம் உடலில் செயல்பட முடியும். நம் இன்றைய உடல் வாழ்வின் வரையறையையும் ஜடத்தன்மையையும் விலக்கி அவ்விடத்தில் தம் உயர்ந்த தூய்மையான தீவிர நிலைகளைச் செயல்படச் செய்யலாம். அவ்வாழ்வு பழக்கமான உந்துதல்-களால் ஏற்பட்டது. இது உண்மையானால் உன்னத உடலின் பரிணாமம் பெற்ற வாழ்வுக்கு வாய்ப்புண்டு. விலங்கின் பிறப்பு, வாழ்வு, மரணத்திற்குரிய எளிய நிபந்தனைகளால் இதுவரையறுக்கப்படாது. இவை வியாதி, குழப்பம், சிரமமான உடல் மாற்றம் ஆகியவற்றின் நிபந்தனைகள் இவை. அவை திறனற்ற பிராண எழுச்சிக்குட்பட்டவை. உன்னத உடலின் பெருவாழ்வு இனி கற்பனைக்குப் புறம்பான கனவாக இருக்காது. அறிவுக்கும் தத்துவத்திற்கும் பொருத்தமான அடிப்படை-யிலெழுந்த வாய்ப்பாக மாறும். இதுவரை நாம் அறிந்தது, அனுபவித்தது, சிந்திக்க முடிந்தவற்றையொட்டி அவை அமையும். அது இரகஸ்ய வெளிப்படையான பெருவாழ்வுக்-குரியன.

இதுவே அறிவுக்குப் பொருத்தமானது. நம் ஜீவனின் தத்துவங்கள் தடையற்ற அடுக்குத் தொடர். அவை ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக பரஸ்பர உறவுள்ளவை. அவையனைத்தும் தெய்வீக விடுதலைக்குரியன என்பதும், அவற்றுள் ஒன்றை விலக்கலாம் என்பதும் பொருத்தமாகாது. மனிதன் உடலி-லிருந்து எழுந்து சத்திய ஜீவியம் வரை உயருகிறான். பொருளின் தரத்தில் அதற்குரிய வாய்ப்பை அந்நிலைகள் பெற்றிருக்கும். அது இலட்சிய தேகம் என்ற காரண தேகத்தில் உருவாகின்றன. அது சத்திய ஜீவியத்திற்குரியது. சத்திய ஜீவியம் தாழ்ந்த சட்டங்களை வெல்கிறது. அவை சத்திய ஜீவிய வாழ்வினுள் சுதந்திரமாக மலர்கின்றன. அவற்றிற்கு தெய்வீக மனப்பான்மை-யுண்டு. உடல் எழுப்பிய வரையறையை அவை வென்று கடக்கின்றன. அது சத்திய ஜீவிய பொருளின் பவர், தத்துவங்-களினின்று வருகிறது. அதாவது பரிணாமம். அந்த ஜீவியம் எந்த லிமிட்டிற்கும் உட்படாதது. அதாவது அது மனமும் புலனுமாகும், அதுவும் உடலின் அகந்தையுள் சிறைப்-படாததாகும். உடலின் புலனுக்குரிய உறுப்புகளால் அளிக்கப்-பட்ட அளவுக்குட்பட்ட ஞானமாகும். அது விடுதலை பெற்ற வாழ்வின் பவர். அளவிலிருந்து விடுதலை செய்யப்பட்டதாகும். தெய்வீக ஜீவனுக்குரிய உடலின் வாழ்வாகும் அது. அதாவது மரணம் வெல்லப்பட்டதாகும். புவியில் பெற்ற அமரத்துவ-மாகும். நம் ஜட உடலுடன் பாசமற்ற வாழ்வு அது. அதாவது உடலின் சட்டங்களைக் கடந்த நிலையது. தெய்வீக ஆனந்தத்தினின்று மூலமாக ஆனந்தம் எழுகிறது. ஆனந்த திராட்சை ரஸம் அமர வாழ்வின் தெய்வமளித்தது. அதுவே புதிரான புனித சோம பானம். ஜீவனுள்ள ஜடத்துள் மனம் விழித்தெழுந்த நிலை அப்பானத்தைப் பெறுகிறது. அது சாஸ்வத அழகு பெற்றது. பொருளின் உள்ளுறை உலகங்களை அது ஊடுருவும். அது பூரண ஒருங்கிணையும் ஜீவனும் இயற்கையும் பெறும் திருவுருமாற்றம்.



## சாவித்ரி

### Page 162: Mid an obscure occult machinery
### இருண்ட சூட்சுமமான யந்திரத்தினிடையே

✡ புதிரான மார்ஸின் நிதானமான நடனம்

✡ பிரபஞ்ச சக்தியின் சூத்திரங்களைத் தருகிறது

✡ காது அகத்தில் விழித்துக் கேட்கும் சிறு குரல்

✡ ஆழ்மனக் குகைகளின் மந்தமான எதிரொலி

✡ எண்ணம் எழுகிறது, பேச்சு அதிர்கிறது, இதயம் ஒலி எழுப்புகிறது

✡ உள்ளம் உள்ள பதிலைக் கூறி உடலையும் உயிரையும் பணிய வைக்கிறது

✡ இச்சூட்சும நுணுக்கங்களை நம் வாழ்வு ஏற்று ஏந்துகிறது

✡ இரகஸ்ய சக்தியின் இனிய வியாபாரத்தின் பேரம்

✡ வாழ்வின் மனம் சிந்தனையின் அடிமை

✡ ஆவி உலகின் அதிசயம் அதன் விருப்பம்

✡ அவற்றின் பிறப்பு, முடிவு, காரணம் நீ அறியாதது

✡ அவை சேவை செய்யும் பெருவழியை கனவிலும் காணவில்லை

✡ வறண்ட வண்ணம், தாழ்ந்த மந்த எண்ணம்

✡ சிறு தீவிர கூறான செயல்களால் நிறைந்தது

✡ விழிப்பான பொம்மை விபரீதமாக ஆடுகிறது

✡ யாரென அறியாமல் கையை உணர்ந்து நகரும்

✡ கேலியான முகமூடி நாடகம் எவரும் காண இயலாதது

✡ அவருக்கு நம் உருவமெல்லாம் பொம்மலாட்டம்

✡ அறியாமல் நடக்கும் நம் செயலெல்லாம் அவர் பிடியுள்

✡ தீவிரமான நம் சச்சரவு ஒரு பொழுதுபோக்கு நாடகம்

✡ தம் ஊற்றான வலிமையை உணர முடியாத அவர்கள்

✡ பிரம்மத்தின் அகண்டத்தில் பங்கு கொள்ளும் சிறு பகுதி

✡ இருளின் கருவிகள் ஒளியாய் நடிக்கும்

✡ இருண்ட ஆன்மா அசைக்கும் இருளான உலகம்

✡ பிரியமில்லாமல் சேவை செய்யும் பெரும் சக்தி

✡ அசத்தின் யந்திரங்கள் தற்செயலை அமைத்து

✡ பெருநெறியின் குதர்க்கப் பாதைகள்

✡ அறியமுடியாததின் கருவிகள் நம்மைக் கருவியாக்கும்

✡ இயற்கையின் அடியில் சக்தியை நிரப்பி

✡ மனித செயலை இயக்கும் உயர்நிலை, தன் செயலெனத் தணியும்

✡ விதியின் தாறுமாறான போக்கை வீட்டிற்குள் கொணர்ந்து

✡ கேலிக்கூத்தான ஆர்ப்பாட்டத்தை நம் தலைவிதியெனக் கொண்டு கைமாறும் மனித வாழ்வு

✡ அர்த்தமற்ற கோணல் அற்புதமான விளையாட்டு

✡ உயர்ந்த சத்தியத்தை உத்வேகமாக எதிர்க்கும்

### ஜீவிய மணி

**பக்தி ஆர்வம் தன்னைப் பூர்த்தி செய்யும்பொழுது ஆசையையும் நல்ல முறையில் பூர்த்தி செய்யும். ஆசை தானழிவதுடன் ஆர்வத்தையும் தடை செய்யும்.**





## 22/9. அணுவைக் கொண்டு அனந்தமான அகண்டத்தைச் செய்வது ஆன்மாவின் செயல்படும் திறன்

*உள்ளத்தால் உலகை உருவாக்கியது ஆன்மீகம்*

- கணவன் மனைவியை திருமணத்தால் ஏற்பது சடங்கு, சம்பிரதாயம்.
- உள்ளத்தால் அவளைத் தனக்குடையவள் என்று ஏற்று நிறைவடைவது மனம் செய்யும் ஆன்மீகத் திருமணம்.
- கு.பா.ரா.வின் ‘யார் பிசகு’ என்ற சிறுகதையில் மனைவி கணவனைக் கேட்கும் கேள்வியிது.
- ஊர், குடும்பம், தொழில், விவசாயம், வியாபாரம் ஆகியவை ஸ்தாபனம்.
- இவற்றிற்குரிய முறையுண்டு. முறை பலன் தரும்.
- இவற்றுள் சிறந்தது குடும்பம். முறையால் ஏற்படுவது அன்று. உள்ளத்தின் உறவால் ஏற்படுவது. அவ்வுறவு முறையானால் குடும்பம் உயர்வை இழந்து முறையான குடும்பமாகும். அங்கு தவறு எழாது. பண்பின் உயர்ந்த மணம் வீசாது.
- கட்சி, கிளப், ஸ்தாபனங்கள் சிறந்த நிலையில் இது ஒரு குடும்பம் எனக் கூறுவர்.
- குடும்பம் அகத்தில் ஏற்பட்டு, புறத்தில் செயல்படுகிறது.
- நட்பு, குரு சிஷ்ய உறவு, திருமணம் இவ்வுயர்வுக்குரியது.
- நட்பின் இவ்வுயர்வை திருவள்ளுவர் ‘கேளிழக்கம் கேளார்’ என்றார்.
- குரு சிஷ்ய உறவில் ஆன்மீகக் கர்மம் செயல்படும் ஆழத்தைக் காட்டுவது, குரு சிஷ்யனைக் கொலை செய்வதால் குருவுக்கு பிரம்மஹத்தி வந்து விடக்கூடாது என சிஷ்யன் தப்பிக்க முயல்வது.

- கணவனை நண்பனாகவும், குருவாகவும் கொண்ட பெண் உத்தமி எனப் பெயர் பெற்றவள்.
- மனைவியை உள்ளத்தால் ஆன்மீக குருவாக ஏற்க முடியும், ஏற்க வேண்டும் என்ற நம் பரம்பரை இலட்சியம் நடைமுறையில் பெரும்பாலோர் அறிந்ததில்லை.
- இலட்சியம் இலட்சியமாகவே இருந்தாலும் அதற்கு ஆன்மீக ஜீவன் உண்டு.
- குரு என்றால் அவர் கூறும் சொல் அவர் ஆன்மீக சித்தியைத் தாங்கி வரும் மந்திரம். அதை அப்படியே அக்ஷரச் சுத்தமாக ஏற்பது முறை, முழு ஆன்மீகப் பலன் தரும் என்பது விளக்கம்.
- மகாத்மா காந்தியை அரசியல் தலைவராக இல்லாமல், ஆன்மீக குருவாக கட்சி ஏற்றதால் நாட்டில் பெரும் சுதந்திர இயக்கம் ஏற்பட்டது.
- 1943-லும், 1947-லும் நேரு, பட்டேலால் காந்திஜியின் சொல்லை ஏற்க முடியவில்லை. மௌண்ட்பேட்டன் கூறுவதை ஏற்றனர்.
- கணவன் மனைவியை ஆன்மீக குருவாக ஏற்பதென்பது என்ன?
  அவள் மனம் கூறும் உண்மையை அவள் பின்பற்றும் நேரம் சொல்லைத் தவிர்த்து அவ்வுண்மையை கணவன் பாராட்டுவது மனைவி கணவனுக்குக் குருவாவது.
- அது காலத்தைக் கட்டுப்படுத்தும் கற்பின் திறனைக் கடந்த ஆன்மீக சத்தியம்.
- அதன்முன் திருமூர்த்திகளின் தில்லுமுல்லு செல்லாது.
- அனுசுயா என்ற படத்தில் அன்னை திருமூர்த்திகள் குழந்தைகளானதைக் கண்டு **"It is lovely, lovely"** என்றார்.
- உண்மைக்கு உரிய பீடங்கள் பல. மனச்சாட்சி உயர்ந்த-தெனினும் இந்தப் பீடமாக மாற அதற்குத் திறனில்லை. ஏனெனில் அது மனத்தின் சாட்சி.

*இது மனம் பெறாத திறன். ஆத்மா பெற்ற திறன்.*



## அஜெண்டா

**சாஸ்வதம் (eternity)**

Volume 9, page 30

- அனந்தம் என்பது **(infinity)** முடிவற்றது. அந்தம் என்றால் முடிவு. அனந்தம் முடிவில்லாதது.
- ஒரு கோடு போடலாம். அதற்கு இரு முனைகள் உண்டு.
- ஒரு முனையை நீட்டலாம், நீளும், அடுத்த முனையை நீட்டலாம் அதுவும் நீளும். அப்படி முடிவற்று நீளும் தன்மை அனந்தம்.
- அனந்தம் இடத்திற்குரியது.
- சாஸ்வதம் காலம் முடிவில்லாமல் கடந்ததிலும் எதிர்காலத்-திலும் நீள்வதைக் காலத்தில் முடிவற்றதாக அறிகிறோம். அது காலத்தைக் கடந்தது. சாஸ்வதமானது.
- ஆத்மாவின் புற வெளிப்பாடு அனந்தமான இடம்.
  ஆத்மாவின் அக வெளிப்பாடு சாஸ்வதமான காலம்.
- **Infinity** என்பது உலகம் அறிந்த கருத்து.
  மரபு அதைக் கூறுகிறது. அதுவே மேலே கூறியது.
- பகவான் அனந்தம் **(Infinity)** என்ற கருத்தை அளவுகடந்து விரிவுபடுத்தி விளக்குகிறார்.
- கல்வி என்றால் படிப்பு. பள்ளியில் கல்லூரியில் படித்து பட்டம் பெறுவது. புத்தகம் படித்து அப்படிப்பு விரிவடை-வதைப் போல் மரபு கூறும் அனந்தம்.
- படிப்பு, கல்வி என்ற கருத்தை விரிவுபடுத்தினால் நாம் கற்பதெல்லாம் கல்வி.

  சமையல் கல்வி, விளையாட்டுக் கல்வி, தொழிற்கல்வி.

  இது கல்விக்குப் பரந்த பொருள் தருவதாகும்.

  அக்கல்வி பெறுபவன் **(genius)** மேதையாவான்.

- பகவான் அக்கருத்தை அட்சய பாத்திரம், காமதேனு, கற்பக விருட்சம் என்றவற்றிற்கும் விரிவுபடுத்துகிறார்.
- மரபு மலை போன்றது. பகவான் தரும் ஞானம் மலையைக் குன்றாக மாற்றும்.
- உடலில் சாஸ்வதம் மரணம் அழிவது — காயகல்பம் எனப்படும்.
- ஆத்மாவுக்கு சாஸ்வதம் என்பது சூட்சும உலகில் அழியாமலிருப்பதாகும்.
- காலமும் இடமும் ஆத்மாவிற்குரியது.

  காலத்தைக் கடந்தவன் மனத்தைக் கடந்தவன்.

  மனம் சிந்தனையாலானது.

  மனத்தைக் கடக்க சிந்தனையழிய வேண்டும்.

  சிந்தனையழிய மனம் சொல்லையிழக்க வேண்டும்.

  சொல்லிழந்த மௌனம், சொல்லழிந்த லயமாகும்.
- உலகம் ஆத்ம வெளிப்பாடு.
- ஆத்மாவை அடைவது மோட்சம்.
- ஆத்ம வாழ்வை ஏற்பது பூரண யோக வாழ்வு.
- ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா, பராத்பரா, பராபுருஷா, பரமேஸ்வரா என்பவை ஆத்மாவின் அடுத்தடுத்த உயர்ந்த நிலைகள்.

**ஜீவிய மணி**

**சுயநலத்திற்கு செய்யும் சேவை பொறாமையின் கொடுமை தன்னைப் பூர்த்தி செய்ய உதவும்.**



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 102. கபாலம் விரிவது Mental Consciousness மனஜீவியம் வளர்வது.

- சூட்சுமம் நிறைந்த அன்பர் பதினான்கு வருடம் என்னுடனிருந்தார்.
- மனிதர்களைக் காணும்பொழுது அவர்களுடைய சூட்சும அம்சங்கள் அவருக்கு ஓரளவு தெரியும்.
- முதல் நிலையில் ஒருவர் எண்ணம் உணர்வாகி வெளிப்படும்.
- முடிவான நிலையில் அவர் பூர்வஜென்ம வாழ்வு தெரியும்.

  அன்னை ஒருவரைக் காணும்பொழுது முன்பிறப்பின் உருவம் தெரிவதுண்டு.

  பகவான் எழுத்தாளர் வ.ராவைப் பார்த்தபொழுது ஓராண்டிற்குப் பின் அவருருவம் தெரிந்தது.
- அறிவு பெரிதானால் அவர் தலை சூட்சுமப் பார்வையுள்ளவர்க்கு பெரியதாகத் தெரியும்.
- ஆசைக்கு வாசனையுண்டு. அளவுகடந்த ஆசையின் மணம் மலத்தின் வாடை.
- மனிதத் திறமைகள் அறிவு, உணர்ச்சி, சொரணை, கற்பனை, சூட்சுமம், நுணுக்கம், ஆன்மீகம், உள்ளுணர்வு என உலகிலுள்ள அனைத்தையும் அறியும் அம்சங்கள்.
- இவை இரண்டு இணைந்தால், உதாரணமாக அறிவும் சூட்சுமமும் சேர்ந்தால் அது எளிய மனிதனுக்கு இல்லாத நூற்றுக்கணக்கான வாயில்களைத் திறக்கும்.
- இரண்டு, மூன்று, பல, அனைத்துமாக சேர முடியும்.

- தாகூர் ‘பெண்ணின் முந்தானையின் அசைவுக்கு அவள் காதலுணர்வு கருத்தாகி அதன் அழகை சூட்சுமமாக வீசுகிறது’ என்கிறார்.
- காதற்பருவத்தில் எழும் திறமைக்கு காதலியின் நடையில் அது தென்படும். ஓராண்டு கழித்து இருக்காது. அவளை அவன் மணந்தால், அவள் உள்ளிருந்து குரோதம் எழும் வேகத்தை அறிந்தபின் அதே அசைவு குரோதத்தை விளக்கும்.
- ஷேக்ஸ்பியர் நீக்ரோ பெண்மணியின் தடித்த உதட்டில் காதலன் காணும் பவித்திரமான புனிதம் அவனுக்கு மட்டும் உரியது என்கிறார்.
- வாழ்வில் மணம் வேகமும், தீவிரமும் உண்டு எனக் கூறும்.
- வாழ்வில் ஆசை அன்பைச் சுமந்து வரும் அழகு காதற்பருவம் எளிதில் கண்டு கொள்வது.
- அன்பு தெய்வீகமானது. அது விகாரத்தில் அழகாக மிளிரும்.
- எந்த அன்பருக்கும் தெய்வீக ஜீவியம் மனத்தை நிரப்பி, அதன் சாரம் பொருளை நிரப்ப முயல்வது, யோகம் ஜீவனில் வளர்வது.

  கபாலம் எலும்பால் ஆனது.

  கபாலம் விரிவது, ஜீவியம் ஆன்மீக ஜீவியமாகி, பொருளும் ஆன்மீக ஜீவியத்தால் நிரம்பி, வழிந்தோடுவதாகும்.

  விரியும் ஜீவியம் பிரபஞ்சத்தில் உலவும் ஜீவியத்தைத் தொடும்.

  அதனால் அது தொடுமிடமெல்லாம் நம் மனம் சொந்த உணர்வு போல் அறியும்.

### ஜீவிய மணி

**சுயநலத்தைக் கடந்த நல்லது எதுவும் மனித உறவில் உற்பத்தியாகவில்லை.**



## அன்பர் அனுபவம்

வள்ளி, அம்பத்தூர்

என் பெயர் வள்ளி. எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. நான் இருபது வருடங்களாக காய்கறிகள் மற்றும் பழங்கள் எடுத்து வீடு, வீடாகச் சென்று விற்பனை செய்து வருகிறேன். எங்கள் வீட்டில் நானும், என் அப்பாவும்தான் உள்ளோம். காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்றுதான் குடும்பம் நடத்தி வருகிறேன். ஒரு கருப்புப் பூனையை எடுத்து வந்து வளர்த்தேன். அதன் சந்ததியாக இப்போது மொத்தம் பதினான்கு பூனைகள் உள்ளன. சுமார் மூன்று வருடங்களாக இந்தப் பூனையை வளர்த்து வருகிறேன். பூனைகள் மிகவும் பாசமாக இருக்கும். கறுப்புப் பூனையின் பெயர் பிரியா. வியாபாரம் முடிந்து மதியம் வீட்டிற்குப் போனதும் பிரியா என்று கூப்பிட்டால், பதினான்கு பூனைகளும் ஓடி வந்து காலைச் சுற்றிக் கொள்ளும். பூனைக்கு சாப்பாடு, பால், வாரத்திற்கு இரண்டு முறைகள் மீன், பால் சாதம் போடுவேன். இதில் நான்கு குட்டிகள் போட்ட ஒரு பூனைக்கு நான்கு நாட்களாக உடல் நலம் சரியில்லை. அன்று வியாபாரம் முடித்துவிட்டு மாலை வீடு திரும்பியதும் பூனைக்கு பேச்சு, மூச்சு இல்லை. என் அப்பா பூனையை கட்டில்மேல் போட்டு படுக்க வைத்து துணியைப் போட்டு போர்த்தி மூடி வைத்திருந்தார். பூனை செத்துப் போச்சு என்றார். நான் அழுது புலம்பினேன். அப்பா, அதன் விதி அவ்வளவுதான் என்றார். காலையில் எழுந்ததும் நம் வீட்டின் பின்னால் புதைத்து விடலாம் என்றார்.

என் வீட்டில் மதர் அம்மா போட்டோ ஒன்று வைத்து வணங்கி வருகிறேன். அப்பா சொன்னதை நம்பாமல், கட்டில்மேல் போட்டிருந்த பூனையை எடுத்து என் மடியில் போட்டுக் கொண்டு மதர் அம்மா முன்னால் உட்கார்ந்து இந்த பூனையின் நான்கு குட்டிகளும் கஷ்டப்படும். இந்தப் பூனையை எப்படியாவது பிழைக்க வையுங்கள் என்று அழுது புலம்பினேன். மதரை வேண்டிக் கொண்டே பூனையைத் தடவிக் கொடுத்தேன்.

என்ன ஆச்சரியம்! ஒரு மணி நேரத்தில் இந்தப் பூனை பெரிய கொட்டாவி விட்டு எழுந்தது. எழுந்து சிறிது நேரத்திற்கெல்லாம் ஓடி விளையாட ஆரம்பித்தது.

கொஞ்ச நேரம் கழித்து வந்து மறுபடியும் சோர்ந்து படுத்து விட்டது. எங்களுக்குத் தெரிந்த பையன் எங்கள் வீட்டிற்கு அவ்வப்போது வருவான். அவன், 'என்னமோ மதர் அம்மா பூனையை காப்பாத்திட்டாங்க என்று சொன்னாயே, அது விளையாடவே இல்லையே' என்று சொன்னான். அதற்கு 'இவங்க உயிர் கொடுத்த மதர் அம்மா. கண்டிப்பாக விளையாட வைப்பாங்க' என்று சொன்னேன். பிறகு, மதர் அம்மாவிடம், நீங்கள் உயிர் கொடுத்தப் பூனையை நல்லபடியாக காப்பாற்ற வேண்டும் என்று நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்தேன். மதர் அம்மா கருணையால் அந்தப் பூனை இப்பொழுது நல்ல active-ஆக இருக்கிறது. மதர் அம்மாவிற்கு என் நன்றிகள்.

## ஜீவிய மணி

**யோக பாஷையைச் சாதாரண பக்தர்கட்குக் கூற முடியாது. அதன்படி என்னை அனைவரும் மட்டமாகப் பேசுகின்றார்கள், நடத்துகிறார்கள் என்று உண்மையாக நினைத்தால், உன் மனம் பிறரை மட்டமாக நினைக்கிறது என்று பொருள். உனக்கு அது தெரியலாம், தெரியாமல் போகலாம். அதுவே உண்மை. தெரிந்தால், வேலையை அங்கு ஆரம்பிக்க வேண்டும். தெரியாவிட்டால், 'எனக்கு இந்த மரியாதைதான் தகுதி' என்று ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை வேண்டும்.**



# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

முறைக்குரிய அதிகபட்சத் திறன் வேறு, நமக்கு அதே முறை கொடுக்கக்கூடிய அதிகபட்சப் பலன் வேறு. நமக்குரிய அதிகபட்சப் பலன் கிடைக்க, நாம் நம் முழுச் சக்தியையும் (energy) நமக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்; சிதறவிடக் கூடாது. சக்தியின் (energy) அளவு பலனின் அளவை நிர்ணயம் செய்யும். நம் பங்குக்குச் சக்தியை முழுமையாகக் கொடுத்த பின், அந்த அளவு சக்தியால் நாம் எடுத்துக்கொண்ட முறை அதிகபட்சப் பலனைக் கொடுக்க என்ன செய்ய வேண்டும் என்பதே கீழே காணும் முக்கியக் கருத்தாகும்.

### *1. காலை, மாலை தியானம்:*

தியானம் உயர்ந்தது. பெரும்பாலோர்க்கு அது பலிப்ப-தில்லை. தியானத்தைத் தேர்ந்தெடுப்பவர்கள், தங்களுக்கு ஓரளவு தியானம் பிடிபட்டால்தான் அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். தியானத்திற்குரிய சிறப்பான நேரம் காலை 6 மணிக்கு முன் உள்ள நேரம். 6 மணிக்கு முன், அதாவது 5 அல்லது ஐந்தரை மணிக்குள் குளித்துவிட்டு, தியான அறையைச் சுத்தம் செய்துவிட்டு தியானத்திற்குரிய மனச் சூழ்நிலையுடன் தயாராக முடியும் என்பவர்களுக்கு இது உகந்தது. மனச் சூழலைப் போல் புறச் சூழலும் (house circumstances) பெரிய அளவுக்கு அமைதியாக இருத்தல் நலம். நேரமும், மனமும், சூழ்நிலையும், எழுந்திருக்கும் பழக்கமும் ஒத்து வந்தபின், தியானத்தின் அடுத்த அம்சங்களைப் பார்ப்போம்.

எல்லா முறைகளுக்கும் பெரும்பாலும் பொதுவான ஒரு நிலையுண்டு. அதாவது முறைகளுக்கு ஜீவன் உண்டு. முறை என்பதே நாம் ஏற்படுத்தியதுதான் என்றாலும் அவற்றிற்கும் ஜீவன் உண்டு. தியானம் என்பதற்கு ஜீவன் பூரணமாக உண்டு. நாம் தியானத்தை மேற்கொண்டு முழுப் பலன் அடைய

வேண்டுமானால், தியானம் ஜீவனுள்ளதாக இருக்க வேண்டும். தியானத்தின் ஜீவனும், நாமும், உயிருள்ள, உணர்வுள்ள தொடர்பு கொள்ள வேண்டும். அது போன்ற தொடர்பு ஏற்பட வேண்டியவற்றை நாம் மேற்கொள்ள வேண்டும்.

மேஜைக்கும், நாய்க்குட்டிக்கும் உயிரைப் பொருத்தவரை ஒரு வித்தியாசமிருந்தால் குட்டியை நாம் உயிருள்ள ஜீவனாக நடத்துகிறோம். அதேபோல் தியானத்தை உயிருள்ளதாக அறிந்து அறிவிலும், உணர்விலும் அத்துடன் ஒரு ஜீவனுள்ள தொடர்பை உள்ளூர ஏற்படுத்தி, அதை நாளாவட்டத்தில் வளர்த்து வர வேண்டும். இதற்குச் சில உபாயங்கள் உதவும்.

1. அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் தியானத்தைப் பற்றி சுமார் 100, 200 இடங்களில் குறிப்பாகவும், சிறப்பாகவும், பொதுவாகவும், விளக்கமாகவும் எழுதியுள்ளார்கள். ஒரு சிரமத்தை மேற்கொண்டு அவையெல்லாவற்றையும் திரட்டி, **(a small booklet "Meditation" is sold by Sri Aurobindo Society)** அவற்றைப் பயின்று, அங்குள்ள கருத்துகளை வெறுங்கருத்தாக எடுத்துக்கொள்ளாமல், யோக ரகஸ்யங்களாகக் கருதி, மனதில் பதிய வைத்து, ஜீவனில் ஏற்றுக்கொள்ள வேண்டும். பல்வேறு புத்தகங்களில் தியானத்தால் பல மகான்கள் அடைந்த சிறப்புகளைத் திரட்டிப் படித்து, தியானத்தின் உன்னதமான மேன்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
2. நம்முள் தியானத்துடன் ஓர் உறவு பிறந்து வளர வேண்டும்.
3. நாள் முழுவதும் தியானத்தின் நினைவு நம் செயல்களுக்குப் பின்னணியாக இருந்தால், அது அன்றைய தியானத்திற்கு உதவும். 4 நாட்கள் கழித்து வெளியூரிலிருந்து மகன் வரப் போகிறான் என்றால், அவ்வெண்ணம் நம் மனத்தின் அடியில் இருப்பதைப் போல், தியானம் இருக்க வேண்டும்.
4. எந்த இடத்தில், எந்த முறையில் **(pose)** உட்கார்ந்தால் தியானத்திற்கு அதிகப் பொருத்தமாக இருக்குமோ, அந்த முறையை நாமே நமக்கு வகுத்துக்கொள்ள வேண்டும் **(most comfortable sitting posture is best suited).**



5. தியானம் வரும்பொழுது குறுக்கிடும் எண்ணங்களைக் கவனித்தால் பெரும்பாலானவற்றை விலக்க முடியும். உதாரணமாக ஒரு கடிதம் எழுதும் எண்ணம் தியானத்தில் குறுக்கிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். அடுத்த முறை அதுபோன்ற கடிதம் எழுத வேண்டியிருந்தால், அதை முன்கூட்டி எழுதிவிட்டால், அவ்வெண்ணம் விலகிவிடும். நம்மால் முடிந்த விஷயங்களைச் சரி செய்து தியானம் பூரணமாக உதவ வேண்டும்.
6. மனத்தில் குறையாக ஒரு பிரச்சனையிருந்தால் — **e.g.** எதிர்பார்த்த ஆர்டர் வரவில்லை, வராது போலிருக்கிறது — அதைத் தியானத்திற்கு முன் பிரார்த்தனையாகச் செய்தால் நல்லது. அப்பிரச்சனையைத் தீர்க்கும் திறன் தியானத்திற்கு ஒரு கட்டத்தில் வருவதுண்டு. அந்நிலைக்கு வந்து விட்டால், அந்நிலையைக் காப்பாற்றும்படி நாம் நம் அன்றாட வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். தியானத்தின் திறனைப் பாதிக்கும் எந்தக் காரியத்தையும் விலக்க வேண்டும்.

இந்த அளவில் தியானத்தை மேற்கொண்டால், நாம் இருக்கும் நிலையில் தியானம் அன்னையின் அருளை எவ்வளவு அதிகமாகப் பெற்றுத் தர முடியுமோ அதைத் தரும் திறனுடையதாகும்.

**2. நாம ஜெபம்:**

மிக எளிமையான முறை. எல்லோரும் கையாளக்கூடியது. எளிமையான முறை என்பதால் இதனால் பெரும்பலனை அடைய முடியாது என்றில்லை. எளிமையான முறையை, எளிமையாகப் பின்பற்றினால் பெரும் பலன் கிடைக்காது. எளிமையான முறையானாலும், அதற்குரிய கரு உருப்பெறும் வண்ணம் அதைக் கடைப்பிடித்தால் அதனால் அதிகபட்சம் நாம் எவ்வளவு பெற முடியுமோ அதைப் பெறலாம்.

நாம ஜெபத்தின் தத்துவம் என்ன? மனிதனுடைய அழைப்புக்கு ஆண்டவன் செவிசாய்க்கின்றான் என்பதே இதன் அடிப்படைக் கரு. நாம ஜெபம் செறிந்து அடுத்த கட்டத்திற்குப்

போனால் அழைப்பு எழும். ஜெபத்தின் அதிகபட்சப் பலனைப் பெற நாம் ஜெபம் செய்யும்பொழுது நம் முழுச் சக்தியும் (**energy**) அதில் வெளிப்பட வேண்டும். அது வேண்டுமானால் மனம் மௌனமாக இருக்க வேண்டும். அது உயர்ந்த நிலை. அது இல்லை என்றால், மனம் ஒரு நிலையாக இருக்க வேண்டும். பொதுவாக நாம ஜெபத்தை ஏற்றுக்கொண்டு அனுதினமும் அனுஷ்டிப்பவர்கள் மனம் ஓரிடத்திலும், ஜெபம் வேறிடத்திலும் எனப் பிரிந்து நிற்கும். அந்நிலையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். அதாவது வாய் ஜெபத்தைச் சொல்லும், மனம் வேறு சிந்தனையில் இருக்கும். இந்த நிலையில் ஜெபத்திற்குக் குறைந்தபட்ச பலன்கூட வாராது. ஜெபம் செய்பவர்கள் மனத்தை மௌனமாக்கிக்கொள்வது சிறந்தது. அது கடினம் என்பதால் நான் அதைக் கருதவில்லை. அதற்கு அடுத்த-படியாக, நாம ஜெபத்தை (**Mother**, அம்மா, மா, அன்னை) மேற்கொள்ளுமுன் மனத்தை ஒரு நிலைப்படுத்தி, அந்நிலையில் இருந்து ஜெபம் செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். அந்நிலை 6, 7 நிமிஷத்தில் கலைந்தால், ஜெபத்தை அத்துடன் நிறுத்திக்கொண்டு அடுத்த முறை ஜெபம் 7, 8 நிமிஷம் வரை ஒரே நிலையிருந்து சொல்ல முயல வேண்டும். அதேபோல் 20, 30 நிமிஷம்வரை பழகிக்கொண்டால், ஜெபம் ஆரம்பித்தவுடன் மனம் அலைவது நிற்கும். இதுவே ஜெபத்திற்குத் திறனளிப்பது. காலை, மாலை தியான நேரத்தில் நிலைத்த மனத்துடன் ஜெபத்தைப் பழகுவது முதற்கட்டம்.

இரண்டாம் கட்டம் முக்கியமானது; திறனுடையது; உயர்ந்தது. அதாவது நாள் முழுவதும் நாம் வேலை செய்யாமலிருக்கும் நேரங்களில் மனம் அலைபாய்வதும், சலனம் அடைவதும், கவலைகளை ஊன்றிப் பார்த்து வளர்ப்பதும் போன்ற காரியங்களில் ஈடுபடும். வேறு வேலை செய்யாமல் சும்மா உட்கார்ந்திருக்கும் பொழுது, சுமார் 2, 3 நிமிஷம் மனம் நிலைத்து ஜெபம் செய்யப் பழகி, அது பலித்தால், நாம் சும்மா இருக்கும் நேரம் முழுவதையும் ஜெபத்தின் பிடியில் நாளாவட்டத்தில் கொண்டுவந்துவிடலாம். பொறுமையாக நாம் இதைச் செய்து வெற்றி பெற்று, 7 அல்லது



10 நாட்கள் பலித்துவிட்டால், பின்னர் காலை, மாலை அரை மணி அல்லது ஒரு மணி நேரம் ஜெபம் செய்தால் போதும். நாள் முழுவதும் மற்ற நேரங்களில் ஜெபம் உயிருடன் மனத்தின் அடியில் இருக்கும். முடிந்தவரை ஜெபித்தால் நல்லது. முடியாவிட்டால் மனம் தானே ஜெபிக்கும். நாம ஜெபத்தால் பெரும்பலன் அடைய இது உதவும். மனம் மௌனமாக (**silent repetition**) ஜெபத்தை ஏற்றுக்கொண்டால் நாமஜெபத்தின் உச்சியை நாம் அடைவோம்.

### 3. *அழைப்பு*:

இதைப் பற்றி ஒரு முழுக் கட்டுரை (அமுத ஊற்றெழும் அழைப்பு) எழுதியிருப்பதால் மீண்டும் இங்கு அதைக் குறிப்பிடவில்லை.

### 4. *பொதுவான ஆத்ம சமர்ப்பணம்*:

சமர்ப்பணம் என்பதன் பொருள் மனிதன் தன்னை விலக்கி, அந்த இடத்தில் இறைவனை வைப்பதையே, ஒவ்வொரு செயலிலும் நாம் சமர்ப்பணம் என்று குறிக்கிறோம்.

பரீட்சை அடுத்த மாதம் வரும்பொழுது இந்த மாதமே படிக்க ஆரம்பித்தால்தான் நல்ல மார்க் வாங்க முடியும் என அறிவு சொல்கிறது. டென்னிஸ் விளையாட்டு ஆர்வம் அதைப் புறக்கணித்து விளையாடச் சொல்கிறது. மனிதனுக்குள்ளே அறிவுக்கும், ஆசைக்கும் உள்ள முரண்பாடு இது. இதேபோல, மனிதனுடைய ஒவ்வொரு செயலையும் எப்படிச் செய்ய வேண்டும் என்ற நியதியை அவனுடைய ஆசை சில இடங்-களிலும், அறிவு சில இடங்களிலும், பண்பு மற்ற இடங்களிலும் நிர்ணயிக்கின்றன. இவையெல்லாம் இறைவனின் நியதி-யிலிருந்து வேறுபட்டிருக்கலாம், மாறுபட்டிருக்கலாம், முரணாக இருக்கலாம். ஆதலால் ஒரு செயலைச் செய்யும்முன் ஆசையை, அறிவை, பண்பைக் கேட்பதற்குப் பதிலாக உள்ளுறையும் இறைவனைக் கேட்டு, அவன் நியதிப்படி அதைச் செய்வதே ஆத்ம சமர்ப்பணமாகும். பொதுவான ஆத்ம

சமர்ப்பணம் என நான் இங்கு குறிப்பிடுவதும் இதையே என்றாலும், சிறப்பான மற்ற சில சமர்ப்பணங்களிலிருந்து ஓரளவு வேறுபடுகிறது. நம் அன்றாடச் செயல்கள் அனைத்தையும் சமர்ப்பணம் செய்து, பின்னர் செயல்படுவதைப் பொதுவான சமர்ப்பணம் என்றேன். அழைப்புக்கும், சமர்ப்பணத்திற்கும், நினைவே வழிபாடு என்பதற்கும் என்ன வேறுபாடு என்றொரு கேள்வியை எழுப்பி சுருக்கமாகப் பதில் அளித்துவிட்டு மேலும் தொடருகிறேன்.

நினைவே வழிபாடு; சமர்ப்பணத்தைவிட எளியது. அதனால் நினைவை நாள் முழுவதும் மேற்கொள்வதால், அது சமர்ப்பணத்தின் பலனை அளிக்கும். போஸ்ட் ஆபீஸுக்குப் போக வேண்டும் என்றால் அன்னையை நினைத்துப் பிறகு போகிறோம். சும்மா உட்கார்ந்திருக்கும் பொழுது அண்ணன் நினைவு வந்தால், அன்னையை நினைத்துப் பிறகு அண்ணனை நினைக்கிறோம். இடைவிடாது ஒவ்வோர் எண்ணத்திற்கும், செயலுக்கும் முன்பாக அன்னையை நினைப்பதை "நினைவே வழிபாடு" என்கிறோம். சமர்ப்பணம் என்பதைச் சும்மா இருக்கும்பொழுது செய்வதில்லை. ஒரு காரியத்தைச் செய்யுமுன் அதை ஆத்மாவுக்குச் சமர்ப்பணம் செய்து, பின்னர் அது விட்ட வழியே அக்காரியத்தைச் செய்வதை, சமர்ப்பணம் என்கிறோம். ஆகவே நினைவு எப்பொழுதும் உள்ளது. அன்னையை நினைத்துவிட்டு நம் இஷ்டப்படிச் செயல்படுகிறோம். சமர்ப்பணம் என்பது செயல்களுக்கு முன்னர் மட்டுமே எழுவது. சமர்ப்பணம் செய்தபின் அச்செயலை நம் இஷ்டப்படிச் செய்ய முடியாது. ஆத்மாவின் ஆணைப்படியேதான் செய்ய வேண்டும். அழைப்பு என்பதன் மூலம் அன்னையின் சக்தியை நம்முள் கொண்டுவருகிறோம். அந்தச் சக்தி நம் செயலை, நம் விருப்பப்படி, தீவிரமாகச் செய்ய உதவும்.

தொடரும்...



## அன்னை இலக்கியம்

## பார்வைகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### இதுவரை நடந்த கதை

தத்தாத்ரேயனுக்கு மதுமதியோடு நிச்சயதார்த்தம் நடக்கவிருக்கிறது. அவனைக் காதலித்து பின் மணக்க மறுத்த அவனது மாமா பெண் தரங்கிணி தான் இழந்ததைப் பெறுவது எப்படி என ஏங்கி நிற்கிறாள்.

தத்தாவின் அம்மா மங்களம், குடும்ப நண்பர்களான வாயாவி மாமா, பகுத்தறிவு சார், அபிராமி பித்தர், நண்பர்களான வம்சி, கரிகாலன், பவித்ரன், வாத்சல்யா மற்றும் பத்மினி, பிசிபேளா பிரசாதப்பா ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் வாழ்வில் ஒரு வகையான சிக்கல்.

தன் கடந்த கால வாழ்வை ஆராய்ந்து தன்னை மாற்ற முயன்றால் நிம்மதி கிடைக்கும் என்று ஒரு சிறுவன் மூலம் தரங்கிணி அறிந்து கொண்டு அதற்கான முயற்சியை மேற்கொள்கிறாள்.

இக்கருத்தைப் பற்றி பவித்ரனோடு தரங்கிணி பேசிக் கொண்டிருக்கும் போது அது எதிர்பாராமல் ஒலிபெருக்கி மூலம் அனைவரது செவிகளையும், செவிகள் மூலம் இதயங்களையும் அடைகிறது. மண்டபத்தில் இருப்பவர்களில் பலர் தங்கள் கடந்த காலத்தைப் பற்றிய நினைவோடையில் நீந்தத் தொடங்குகின்றனர்.

### 13. தத்தாத்ரேயனின் பார்வை

அதிகாலை குளிருக்கு பாதுகாப்பாக பனித்திரையை போர்த்திக் கொண்டு விழிக்கலாமா, வேண்டாமா என்று உலகம் மெல்லப் புரண்டு சிந்தித்துக் கொண்டிருந்த போது அம்மாவோடு சென்னைக்கு பஸ்ஸில் வந்து சேர்ந்தேன்.

இதற்கு முன்பு நான் பெரிய நகரங்களுக்குச் சென்றதில்லை. போக வசதி இருந்ததில்லை. பிறந்து வளர்ந்த சிறிய ஊரிலேயே பள்ளிப் படிப்பு, சற்றே பெரிய பக்கத்து ஊரிலிருந்த கல்லூரியில் வணிகப் பட்டப்படிப்பு.

நான் பிறந்தபோது வசதியாக இருந்த குடும்பம் நான் வளர்ந்தபோது வசதியை இழந்து விட்டதால் இல்லாமையின் இயலாமையால் சீராட்டப்பட்டு வளர்ந்தவன்.

புதிய செருப்பு, புதிய ஆடை, புதிய புத்தகம், புதிய சாப்பாடு எதையும் நான் கண்டதில்லை.

மிகச் சிறுவயதில் அம்மாவிடம் செருப்பு கேட்டது நினைவில் இருக்கிறது,

‘அம்மா, எனக்கு புது செருப்பு வேண்டும்’

‘கண்ணா, புது செருப்பு காலைக் கடிக்கும். புண்ணாக்கி விடும். பழைய செருப்புதான் காலுக்கு பாதுகாப்பு.’

‘ஆனால் என் செருப்பு அறுந்து விட்டதே. ஏற்கனவே பல முறை தைத்தாகிவிட்டது. இனிமேல் தைக்க முடியாது.’

‘நம் வண்டிக்காரர் பிள்ளை போட்ட செருப்பு ஜோடியை போன மாதமே வாங்கி பத்திரமாக வைத்திருக்கிறேன். போட்டுக் கொள்.’

நான் புதிதாக அணியும் பழைய செருப்புகள் என் கால்களைக் கடித்ததே இல்லை.

இல்லாமையை மறைக்க அம்மா பல அழகிய விளக்கங்களை எப்போதும் தயாராக வைத்திருப்பார். உள்ளூரில் வசதியாக இருந்து நொடித்த குடும்பம் என்பதால் அம்மா எங்கும் வேலைக்குப் போகவில்லை. இருப்பதையெல்லாம் விற்று வாழ்ந்தபின், ஊறுகாய் போட்டு கடைகளுக்குத் தருவது, தையல் வேலை செய்வது போன்ற வேலைகளைச் செய்து சம்பாதித்தார், பள்ளிப்படிப்பு முடிந்ததும் நான் ஏதேனும் வேலைக்குப் போகிறேன் என்று சொன்னபோது அம்மா அதை ஏற்கவில்லை. ‘இழந்த சொத்தை நீதான் மீட்க வேண்டும். அதனால் மேற்கொண்டு படி’ என்று கூறிவிட்டார்.

பொருள் இல்லாமை ஆசை இல்லாமை அல்ல. ஆசைப்-பட்டாலும் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதால் மெல்ல மெல்ல ஆசைகளை வெளிப்படுத்தாமலிருக்கவும், எதிலும்



பற்றில்லாததைப் போல தோற்றம் தரவும் பழகிக் கொண்டு விட்டேன்.

வெளிப்படுத்தாத ஆசைகள் அடைக்கலம் புகுவது நம் ஆழ்மனத்தில்தானே? என்றோ ஒரு நாள் என் கையிலும் ஏராளமான பணமிருக்கும். அப்போது எல்லா ஆழ்மன ஆசைகளும் நிறைவேறும் என்று எனக்கு நானே திரும்பத் திரும்ப சொல்லிக் கொள்வேன்.

சொத்தோ, வியாபாரமோ, தொழிலோ இல்லாதவன் வாழ்வில் வளம் பெற வேண்டுமானால் அதற்கு படிப்பு ஒன்றே வழி என்று ஏதோ ஒரு கணத்தில் என் மனதில் விதை ஒன்று விழுந்தது. அது ஆசைநீரால் வெகு விரைவில் பிரம்மாண்டமான மரமாக வளர்ந்து விட்டது.

என்ன படித்தால் பணக்காரனாகலாம் என்று பள்ளியில் படிக்கும் போது தெரியவில்லை. படிக்க வேண்டும் என்ற வேகமிருந்தது. கையில் கிடைத்ததை எல்லாம் படிக்க ஆரம்பித்தேன்.

நூலகம் என்னுடைய சொந்த வீடு போலாகிவிட்டது. தினசரிகள், வாராந்தரிகள், துப்பறியும் நாவல்கள், எளிய காதல்கதைகள் மட்டுமே வாசகர்களால் விரும்பப்பட்டதால் அறிவுப் பெட்டகங்களும், ஞானப் பெட்டகங்களும் தூசி படிந்து ஒட்டடையால் சிறைப்படுத்தப்பட்டிருந்தன. புத்தகங்களை வாசிப்பதோடு அவற்றை தூசி தட்டி ஒழுங்காக அடுக்கி வைத்து பயன்படுத்தியதால் நூலகருக்கு என்மீது பிரியம் வந்துவிட்டது. எனவே நூலகத்தின் சாவி ஒன்றை என்னிடமே கொடுத்து விட்டார்.

ஓரளவிற்கு வாசிப்பனுபவம் வந்ததும் மற்றவர்களைவிட நான் உயர்ந்தவன், அதிகம் அறிந்தவன் என்ற எண்ணம் சில காலம் என்னுள் இருந்தது. ஆனால் மிக நல்ல வாசிப்பனுபவம் வந்த பின் நான் அறிந்தது மிகக் குறைவு என்ற நல்லறிவு வந்தது. சிறிது அடக்கமும் வந்தது.

அதிகமாக எவருடனும் பேசமாட்டேன். புத்தகங்கள் மட்டுமே என் தோழர்கள். எனக்கு மிகவும் பிடித்தமான புத்தகங்களை, நெருக்கமாக உணரும் நூல்களை என் நெருங்கிய தோழிகளாக கற்பனை செய்து கொள்வேன்.

பத்தாவது படிக்கும் போது, 'வணிகம் படித்துவிடு. சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்டாகி நன்றாக சம்பாதிக்கலாம்' என்று பகுத்தறிவு சார் கூறியதால் வணிகம் படித்தேன். சார்ட்டர்டு அக்கவுண்டன்ஸியும் கல்லூரியில் ஒரு பிரிவாக இருக்கும் என்று முதலில் நினைத்தேன். பின்னர்தான் பட்டய கணக்கரிடம் சில ஆண்டுகள் வேலை செய்து பயிற்சி பெற வேண்டும், கூடவே தேர்வுகளும் எழுத வேண்டும் என்று தெரிந்து கொண்டேன்.

'நம்மூரிலேயே இருந்தால் கணக்குப் பிள்ளையாக மாறிவிடுவான். சென்னைக்கு அனுப்பினால் நகரத்து அனுபவமும், பழக்க வழக்கங்களும் வரும். வாழ்க்கையில் முன்னேற வழிகள் தெரிய வரும்' என்றார் பகுத்தறிவு சார்.

விசாரித்து பார்த்தால் பயிற்சியின் போது மிகவும் சொற்பமான தொகைதான் ஊதியமாகக் கிடைக்கும் என்பதுவும், அது நான் பிழைத்திருக்கக்கூட போதாது என்பதுவும், அந்த எளியத் தொகையைக்கூட பெரும்பாலான பட்டய கணக்காளர்கள் தருவதில்லை என்பதுவும் தெரிய வந்தது.

அம்மாவிற்கு நான் படித்து நன்றாக சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. என்னைப் பல ஆண்டுகள் பிரிந்திருக்க வேண்டுமே என்ற தவிப்பிருந்தது. நான் எப்படி நகரத்தில் வாழப் போகிறேன் என்ற பதட்டமிருந்தது.

'தத்தா, உன் மாமா சென்னையில்தான் இருக்கிறார். மிகவும் வசதியாக வாழ்கிறார். அவர் மட்டுமே நமக்கு உதவ முடியும்' என்று ஒரு நாள் திடாரென சொன்னார் அம்மா.

'அவரோடுதான் நமக்கு மூன்று, நான்கு வருடங்களாக போக்குவரத்து இல்லாமல் போய்விட்டதே' என்றேன்.

'என் அண்ணா மிகவும் நல்லவர். அண்ணிதான் அரக்கி. ஆனால் யார் நல்லவர் கெட்டவர் என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருந்தால் முன்னுக்கு வர முடியாது. வெள்ளத்தில் மூழ்கும் போது கையில் கிடைப்பது சந்தனக்கட்டையா, அல்லது பட்ட மரக்கிளையா என்று பார்க்கக் கூடாது. நாம் மேலே மிதந்து செல்வதுதான் முக்கியம்' என்றார் அம்மா.

எனக்கு பண விவகாரங்கள் புரிந்ததே இல்லை. பணத்தை சம்பாதித்ததோ, செலவழித்ததோ இல்லை. 'நான் படித்து முடிக்க



மூன்று நான்கு வருடங்களாகலாம். அவரிடம் என்ன உதவி கேட்பது? மாதாமாதம் செலவிற்கு பணம் கொடுங்கள் என்று கேட்பதை நினைக்கவே கூச்சமாக இருக்கிறது' என்றேன்.

'நீ வெளியே தங்கி, வெளியே சாப்பிட்டால் உடம்பு என்னவாகும்? அதெல்லாம் சரிவராது. நீ மாமா வீட்டிலே தங்கி, அங்கேயே சாப்பிட்டுக் கொண்டு, படிப்பை முடித்து விடு. நான் முடிவு செய்து விட்டேன்' என்றார் அம்மா.

மாமா வீட்டில் நான் தங்க வேண்டுமென அம்மா முடிவெடுத்திருப்பதாகக் கூறியதைக் கேட்டதும் என்னால் புன்னகைக்காமல் இருக்க முடியவில்லை. அம்மாவிற்கு தன்னம்பிக்கை அதிகம்.

ஆனால் அம்மா அதை வேறு விதமாக புரிந்து கொண்டார். 'பார்த்தாயா? வெளியே தங்க வேண்டும் என்ற நினைப்பில் நீ பயந்து போயிருந்தாய். மாமா வீட்டில் தங்கலாம் என்று சொன்னதும் உனக்கு சந்தோஷம் வந்துவிட்டது' என்றார்.

அம்மாவின் முடிவை மறுக்கவோ, நிராகரிக்கவோ எனக்குத் தெரியாது. பழக்கமில்லை.

அதனால் என்னிடமிருந்த பழைய சட்டைகளையும், பழைய கால்சட்டைகளையும் ஒரு பழைய பையில் திணித்துக் கொண்டேன். ஆடைகள் பகுத்தறிவு சாரின் பிள்ளை போட்டுக் கழித்தவை. பையும் பகுத்திறவு சாரின் பழைய பை. அவருக்கு பழையதாக இருந்தாலும் எனக்குப் புதியதுதானே?

வாழ்க்கைக் கல்வியை கணந்தோறும் நம்மைச் சுற்றி நடப்பவற்றிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், பிழைப்புக் கல்வி பெற எத்தனை சமரசங்களை செய்யவும், சிரமங்களை மேற்கொள்ளவும் வேண்டியிருக்கிறது. நொடிப் பொழுதில் கடிதத்தை உலகின் மறுமுனைக்கு அனுப்புமளவிற்கு, பிற கிரகங்களுக்கு விண்வெளிக்கலங்களை அனுப்புமளவிற்கு தொழில் நுட்பம் வளர்ந்து வரும் காலத்தில் ஆர்வமுள்ளவர்கள், முயற்சியுள்ளவர்கள், இருக்கும் இடத்திலிருந்தபடி, செலவின்றி கல்வி கற்க எவரேனும் ஏற்பாடு செய்தால் எத்தனை நன்றாக இருக்கும்!

என் ஏக்கத்தை பகுத்தறிவு சாரிடம் வெளியிட்டேன்.

‘தம்பி, நல்ல காரியம் செய்ய ஆர்வம் ஏற்பட்டால் நாமே செய்து விடவேண்டும். அடுத்தவன் செய்வான் என கற்பனை செய்து கொண்டிருக்கக் கூடாது. ஆர்வம் வெற்றி அடைவதின் ரகசியம் ஆர்வத்தை இடைவிடாமல் வளர்த்து, தீவிரப்படுத்திக் கொண்டி-ருப்பதில்தான் இருக்கிறது. நான் பகுத்தறிவு பற்றி பேச ஆரம்பித்த போது அதைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. ஆனால் இடைவிடாமல் அதைப்பற்றி யோசித்ததாலும், பேசியதாலும் நான் பகுத்தறிவு மேதையாகி விட்டேன்’ என்று அடக்கத்துடன் கூறினார் பகுத்தறிவு சார்.

‘ஆர்வம் நிறைவேற உலகமே உதவ வேண்டும்’ என்றேன்.

‘அதெல்லாம் உலகத்தின் பிரச்சனை. நம் பிரச்சனை இல்லை. நாம் என்ன செய்ய முடியுமோ அதை செய்தால் போதும். செய்வதை பெரியதாக செய்து விடவேண்டும். பஞ்சாயத்து உறுப்பினர் தேர்தலில் நின்று பெரிய வெற்றி பெறுவதைவிட பிரதமர் தேர்தலில் நின்று படுதோல்வி அடைவது சிறப்பானது. நான் தனிமனிதன் பகுத்தறிவு பெறுவது பற்றி அதிகம் பேசுவ-தில்லை. சமூகமே பகுத்தறிவு பெற வேண்டும் என்றுதான் பேசு-கிறேன். என்னிடமிருந்து நீயும், மற்றவர்களும் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது’ என்றார் பகுத்தறிவு சார்.

‘ஆமாம் சார். அது உண்மைதான்’ என்றேன்.

‘முதலில் உன் படிப்பை முடித்து, சம்பாதித்து, சொந்த வாழ்க்கையை எவர் உதவியுமில்லாமல் நடத்த ஏற்பாடு செய்து கொள். அதன் பின்பு உலகத்தை மாற்ற முயற்சி செய். ஆனால் அது வரை ஆர்வத்தை அணைய விட்டுவிடாதே!’ என்றார் பகுத்தறிவு சார்.

சென்னைக்கு கிளம்ப சில நாட்கள் இருக்கும்போது நூலகரை சந்தித்தேன். எனக்குப் பிடித்த புத்தகங்களை எல்லாம் ஒரு புதிய பெரிய பையில் போட்டுத் தந்தார்.

‘சார், இதெல்லாம் அரசாங்க புத்தகங்கள்’ என்று தயங்கினேன்.

‘நீயும் இந்நாட்டின் மன்னன்தானே. உனக்கு உரிமை-யுள்ளவைதான் இவை. ஆனாலும், உரிய பணத்தை நான் அரசாங்கத்திற்கு கட்டி விடுகிறேன்’ என்று கூறியவர் சில நூறு ரூபாய் நோட்டுகளைத் தந்தார்.



வாங்கத் தயங்கினேன்.

‘தம்பி, நூலகத்தை பராமரிக்க வேண்டியது என் வேலை. ஆனால் இலவசமாக பல வருடங்கள் அந்த வேலையை நீ செய்திருக்கிறாய். இப்போதைக்கு என்னிடம் இருப்பது இவ்வளவு-தான். என் சொந்த பிள்ளை போன்ற நீ முன்னுக்கு வர வேண்டும் என்ற நினைப்போடு கையிலிருப்பதைத் தருகிறேன்’ என்றார்.

மனநெகிழ்ச்சியுடன் பணத்தை வாங்கிக் கொண்டேன்.

பணம் கிடைத்ததைவிட புத்தகங்கள் கிடைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அந்தப் பணம்தான் சென்னைக்கு பஸ் பயணச்சீட்டு எடுக்கவும், பிற உதிரி செலவுகளுக்கும் உதவியாக இருந்தது. மீதி பணத்தை அம்மாவை வைத்துக் கொள்ள சொன்ன போது அம்மா கண்கலங்கி விட்டார். ‘இதையும் எனக்கு கொடுத்து விட்டு புதிய இடத்தில் என்ன செய்வாய்?’ என்று கேட்டார்.

‘மாமா இருக்கிறாரே!’ என்றேன். அம்மாவை சமாதானப்படுத்த அப்படிச் சொன்னேன். அம்மாவும் சமாதானமானார்.

பேருந்து நிலையத்தில் இறங்கியதும் மாமா வீடு செல்ல ஆட்டோக்காரர் கேட்ட தொகை நாங்கள் ஊரிலிருந்து சென்னை வர செலவழித்த தொகையை விட அதிகமாக இருந்தது.

அங்குமிங்கும் விசாரித்து நகரப் பேருந்து மூலம் மாமா வீட்டிற்குச் சென்றோம். பஸ்ஸில் நவீன மோஸ்தரில் உடை-யணிந்த பெண்கள் விசேஷ வகுப்புக்களுக்காக அந்த அரையிருள் அதிகாலையிலேயே பயணித்துக் கொண்டிருந்தனர். வாரப் பத்திரிகைகளிலும், சினிமாக்களிலும்தான் அப்படிப்பட்ட உடை-களைப் பார்த்திருக்கிறேன். நேரில் இப்போதுதான் பார்க்கிறேன்.

‘தத்தா எல்லோரும் பொல்லாத பெண்கள். உன்னைப் போன்ற கெட்டிக்காரனை பார்த்தால் வலைவீசி விடுவார்கள். எச்சரிக்கை-யாக இருக்க வேண்டும்’ என்று அம்மா ரகசிய குரலில் கூறினார்.

அம்மாவின் தன்னம்பிக்கையும், தன் பிள்ளை மீது கொண்ட நம்பிக்கையையும் பார்த்து புன்னகை எழுந்தது. ஒன்றுமில்லாத எனக்கு வலை வீசும் அளவிற்கு இப்பெண்கள் அறியாமை நிரம்பியவர்களா என்ன!

மாமாவின் வீடு அகன்ற தெருவொன்றில் இருந்தது.

நாங்கள் வீட்டை நெருங்கிய போது அதன் வாசலில் இளம் பெண்ணொருத்தி கோலமிட்டுக் கொண்டிருந்தாள். 'உன் மாமா பெண் தரங்கிணி. நன்றாகப் பேசி, அவளது அன்பை சம்பாதித்துவிடு. அப்போதுதான் இங்கு நிம்மதியாகத் தங்க முடியும்' என்று அம்மா மெல்லிய குரலில் கூறினாள்.

தரங்கிணி தலைக்குக் குளித்து விரித்து விட்ட கூந்தலோடு கவனமாக கோலம் வரைந்து கொண்டிருந்தாள். அவள் மெல்ல அசையுந்தோறும் அவளுடைய கொலுசுகள் இசை எழுப்பின. எங்களைக் கண்டதும் யாரென்று ஒரு கணம் புரியாமலிருந்தாள். பின் அம்மாவை அடையாளம் கண்டு கொண்டு வரவேற்கும் புன்னகையோடு, தோகை விரித்த மயில் மெல்ல அசைந்து எழுந்து நிற்பது போல எழுந்து நின்றாள்.

'வாருங்கள்' என்றாள்.

ஜெயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப் பரணியிலிருந்து பாடலொன்று நினைவிற்கு வந்தது. கப்பம் செலுத்த மறுத்த கலிங்கத்தின் மீது முதல் குலோத்துங்க சோழனின் தளபதியான கருணாகரப் பல்லவன் படையெடுத்துச் சென்று பெருவெற்றி-யோடு திரும்புகிறான். அவன் படை வீரர்கள் பல காலம் பிரிந்திருந்த காதலியரைக் காண ஓடோடி வருகின்றனர்.

காதலன் வருவானா மாட்டானா என்றேங்கி வாசலில் காத்துக் கொண்டிருந்த காதலி ஊடலோடு பொய்ச்சினம் கொண்டு கதவை மூடிக் கொள்கிறாள். காதலன் இனிமையான சொற்களைக் கூறி காதலியை கதவைத் திறக்குமாறு வேண்டுகிறான். காதல் இன்பம் ஊறும் பல பாடல்கள் கொண்ட கடைத் திறப்புக் காட்சியிலிருந்து ஒரு பாடல்.

*கரிகுழல் அசைவற அசைவற*
*துயிலெழும் மயிலென மயிலென*
*பரிபுரம் ஒலியெழ ஒலியெழ*
*பனி மொழியவர்! கடை திறமினோ!*

'பனிபோல குளிர்ந்த இனிய மொழியைப் பேசும் பெண்ணே! கரிய கூந்தல் அசைய அசைய, சிலம்புகள் இனிய ஒலி எழுப்ப எழுப்ப, துயிலெழும் மயிலைப் போல எழுந்து வந்து கதவைத் திற' என்கிறான் காதலன்.



தரங்கிணியைப் பார்க்கும் போது அக்காதலன் வாய்விட்டுக் கூறியதை மனதிற்குள் சொல்லிக் கொண்டேன்.

மறுகணமே என் நிலையை உணர்ந்து மீண்டேன். நான் போர்க்களம் சென்று மீண்ட வீரனல்ல. அடைக்கலம் தேடி வந்திருக்கும் இரவலன். தரங்கிணி என் காதலி அல்ல. எனக்கு பிச்சையிடப் போகும் மாமாவின் பெண்.

தரங்கிணி எழுந்த போது இடுப்பில் செருகி வைத்திருந்த சாவிக் கொத்து கீழே விழ அதை அம்மா பாய்ந்தெடுத்துக் கொடுத்துவிட்டு அவளை அணைத்துக் கொண்டார்.

'கண்ணே, எப்படி வளர்ந்து விட்டாய்! அம்மன் சிலை போல அழகாக இருக்கிறாய். உன்னைப் பார்க்க வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் தவித்துக் கொண்டிருந்தேன்' அம்மா பேசிக் கொண்டே போனாள். சந்தர்ப்பத்தை ஒட்டி அளவுக்கு அதிகமாக பிரியம் காட்டுகிறாள் என்று தோன்றியது.

தரங்கிணியை பார்க்க வேண்டுமென ஆர்வம் எழுந்தாலும் தலையைக் குனிந்து அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தேன்.

## 14. தரங்கிணியின் பார்வை

நான் கல்லூரியில் மூன்றாவது வருட பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்த போதுதான் அவர், அத்தை பிள்ளை, எங்கள் வீட்டில் தங்கிப் படிக்க வந்தார்.

அத்தைக்கு வசதி குறைவு என்பதால், அத்தை மாமாவோடு, உறவாட அம்மா விரும்பியதில்லை இத்தனைக்கும் நாங்களும் பெரிய பணக்காரர்கள் இல்லை. சொந்தமாக வீடும், ஒரு கடையும் இருந்தது.

ஆனால் அந்த சிறிய வசதியே அத்தையின் பார்வையில் எங்களை பெரிய பணக்காரர்களாகக் காட்டியது. அம்மாவோ தன்னை உலகிலேயே பெரிய பணக்காரியாக நினைத்துக் கொண்டிருந்தார். அப்பா எங்கள் நிலை என்னவென்பதை உணர்ந்திருந்தார் என்றாலும் அம்மாவை மீறி எதுவும் பேச மாட்டார்.

அப்பாவிற்கு நிர்வாகத் திறமை குறைவு என்று அம்மாவிற்கு எண்ணமுண்டு. அதனால் அடிக்கடி அம்மா கடைக்கும் போய் வியாபாரத்தை கவனிக்க ஆரம்பித்துவிடுவார். அம்மா கடைக்கு வந்தால் அப்பா கோவிலுக்கு போய் உட்கார்ந்து கொண்டுவிடுவார். அவ்வளவு நெருக்கமான உறவு இருவருக்கும்!

அன்று அதிகாலையில் வீட்டு வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தேன். நல்லவேளையாக அம்மா எழுந்திருக்க-வில்லை. குளித்துவிட்டு காய்வதற்காக கூந்தலை விரித்துப் போட்டுக் கொண்டு கோலம் போட்டதைப் பார்த்தால் திட்டி இருப்பார்.

கோலத்தை முடித்த போது யாரோ என்னை உற்றுப் பார்க்கும் உணர்வு எழுந்து நிமிர்ந்து பார்த்தேன்.

ஒரு உயரமான வாலிபன் திருதிருவென்று விழித்துக் கொண்டு இடது கையில் ஓரங்கள் கிழிந்து போன பழைய பையோடு நின்று கொண்டிருந்தான். வலது கையில் பெரிய புதிய பை இருந்தது. கழுத்தில் துண்டு ஒன்றை மாலை போல போட்டிருந்தான். மாப்பிள்ளை என்ற நினைப்போ! பேப்பர் போடுபவன் என்றால் சைக்கிளில் வர வேண்டுமே!

அவனைப் பார்த்த பின்பு அவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த பெண்மணியைப் பார்த்தேன். இருளில் சரியாக அடையாளம் தெரியவில்லை. கூர்ந்து பார்த்த போது அத்தை என்பது தெரிந்தது. ஆச்சரியமாக இருந்தது.

‘வாருங்கள்’ என்று கூறியபடியே எழுந்த போது இடுப்பில் செருகி வைத்திருந்த வீட்டு சாவி கீழே விழ, அத்தை அதை எடுத்துத் தந்தார். என்னை அணைத்துக் கொண்டு அளவுக்கதிகமாக அன்பை வெளிப்படுத்தினார். அப்பாவிடம் ஏதோ உதவி கேட்க வந்திருக்கிறார் என்று புரிந்து கொண்டேன்.

அதன்பின் மீண்டும் அத்தை பிள்ளையைப் பார்த்தேன். இதற்கு முன் பார்த்துப் பல காலமாகிவிட்டது. தரையைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆளே மாறிப் போயிருந்தார். நான் கூடத்தான் மாறி விட்டிருக்கிறேன். நெடுநெடுவென்று ஒட்டகச்சிவிங்கிப் போல் நன்றாக வளர்ந்து விட்டிருந்தார். பெரிய கோழி முட்டை கண்கள். கைகள் ஒல்லியாக இருந்தாலும் பெண்ணை



அணைக்கும்போது வலிமையுள்ளவையாக மாறக் கூடியவை என்பதை பின்னால் தெரிந்து கொண்டேன்.

‘படிப்பு முடிந்ததா?’ என்று கேட்டேன்.

அதிர்ச்சியுடன் என்னைப் பார்த்து தலையசைத்துவிட்டு மீண்டும் தலை குனிந்து கொண்டார்.

வீட்டுக்குள் இருவரையும் அழைத்துச் சென்றேன். அப்பாவிற்கு ஒரே சந்தோஷம்.

சிறிது நேரம் நலம் விசாரித்துக் கொண்ட பின், ‘எங்களுக்கு உன்னை விட்டால் யாரப்பா ஆதரவு? என் பையன் நன்றாகப் படிக்கிறான். ஆடிட்டர் படிப்பு படித்து சீக்கிரம் ஆடிட்டராகி முன்னுக்கு வர ஆசைப்படுகிறான். கிராமத்தில் வசதியும் இல்லை என் கையில் பணமும் இல்லை. நீதான் அவனுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்,’ என்று கையெடுத்துக் கும்பிட்டு கண்ணீர் விட்டாள்.

மாமா என்ன சொல்வாரோ என்ற பயத்தோடு அத்தை பிள்ளை நின்று கொண்டிருந்தது இன்னமும் எனக்கு நன்றாக நினை-விருக்கிறது. ஆதரவற்று நிற்கும் ஆணின் மீது பெண்ணுக்கு அன்பு ஏற்படுவது இயற்கைதானே? அப்போதே அவரை எனக்கு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது.

‘இது உன் வீடோ, என் வீடோ இல்லை. நம் வீடு. தத்தா சென்னைக்கு வந்து வெளியே தங்கி படித்திருந்தால் எனக்கு வருத்தம் வந்திருக்கும். தத்தா இந்த வீட்டில்தான் தங்கி படித்து முன்னுக்கு வரவேண்டும்’ என்றார் அப்பா.

எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

மிகுந்த அதிர்ச்சி அடைந்துவிட்ட அம்மாவிற்கு இந்த ஏற்பாடு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.

தனிமையில் அம்மா அப்பாவிடம், ‘வயசுப் பெண் இருக்கும் வீட்டில் வயசுப் பையனை வருடக்கணக்கில் விருந்துபச்சாரம் பண்ணுவது சரியா’ என்று கேட்டார்.

‘அதனால் என்ன? அவன் நன்றாகப் படித்து ஆடிட்டராகி சம்பாதித்தால் நம் பெண்ணை உரிமையோடு கட்டிக் கொடுக்கலாமே’ என்றார் அப்பா.

அப்பாவின் மனோரதம் அம்மாவின் கோபத்தை அதிகப்படுத்தியது. ‘என் பெண்ணை ராஜகுமாரனுக்குத் தரத்தான் பெற்று வளர்த்திருக்கிறேன். உங்கள் சொந்தக்கார அன்னக்-காவடிகளுக்கு தாரை வார்க்க இல்லை’ என்று சிடுசிடுத்தார்.

‘கௌசல்யா, நமக்கு கடை வைக்க முதல் கொடுத்ததே தத்தாவின் அப்பாதான். மறந்துவிடாதே!’ என்றார் அப்பா.

அம்மா அத்தையிடம் சரியாகப் பேசவில்லை. அதைப்பற்றி அத்தை கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

அப்பாவின் மீது காட்ட முடியாத கோபத்தை அத்தான் மீது அம்மா முழுமையாகக் காட்டப் போகிறார் என்பது எனக்குப் புரிந்தது,

காலையில் குளித்துவிட்டு அத்தை பிள்ளை அலுவலகத்திற்கு கிளம்பினார்.

‘தரங்கிணி, நீ தத்தாவிற்கு வழி சொல்லி பஸ்ஸில் ஏற்றி விடு’ என்று கல்லூரிக்கு கிளம்பிக் கொண்டிருந்த என்னிடம் அப்பா சொன்னார்.

அவர் எதுவும் பேசாமல், என்னை விட்டு இரண்டடி விலகி படபடப்புடன் நடந்து வந்தார். பேச்சு கொடுத்தாலும் தலையசைப்பின் மூலமே பதில் சொன்னார். எந்த கேள்வி கேட்டாலும் அதிர்ச்சி அடைந்து பின் தலையசைப்பின் மூலமே பதில் சொன்னார். இளம்பெண்களோடு பேசியதே இல்லை போலிருக்கிறது,

பழைய உடைகளை அணிந்து கொண்டு அலுவலகத்திற்கு கிளம்பி விட்டிருந்தார். அவரது கிராமத்தில் இந்த உடை மிடுக்கானதாக இருந்திருக்கும். போகப் போக அவரே புரிந்து கொள்வார் என்று நினைத்துக் கொண்டேன்.

அவருக்குரிய பஸ் வந்ததும் ஏறச் சொன்னேன். ‘கூட்டமாக இருக்கிறது. அடுத்த பஸ்ஸில் போகிறேன்’ என்று மெல்ல கூறினார்.

‘இந்த நேரத்தில் இதுதான் கூட்டம் குறைவான விரைவு வண்டி. இன்னும் கொஞ்சம் நேரங்கழித்து வரும் பஸ்களில் நீங்கள் ஏறவே முடியாது’ என்றேன்.

‘பயணச்சீட்டு எவ்வளவு?’ என்று கேட்டார்.



‘ஐந்து ரூபாய்! இது விரைவு வண்டி. சாதாரண வண்டியில் இரண்டு ரூபாய். சில்லறையாக கொடுங்கள். நூறு ரூபாயை நீட்டிவிடாதீர்கள். திட்டு விழும்’ என்றேன்.

முதல்முறையாக புன்னகைத்தார். ‘எனக்கு அந்தப் பிரச்சனை வராது. என்னிடம் மொத்தமே பத்து ரூபாய்தான் இருக்கிறது’ என்று கூறிவிட்டு பஸ்ஸில் ஏறிப் போய்விட்டார்.

நான் திகைத்து நின்றுவிட்டேன். முதல்முதலாக அலுவலகம் போகிறார். நூறோ, ஆயிரமோ எடுத்துப் போனால் என்ன! சரியான மக்கு.

மத்தியானம் சாப்பாட்டிற்கு என்ன செய்வாரோ! எனக்கென்ன?

அன்று மாலை அவர் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தபோது அம்மா கடைக்குப் போயிருந்தார். அப்பாவோடு அத்தை கோவிலுக்குப் போயிருந்தார்.

வீட்டிற்குள் நுழையும்போது அங்கு நிலவிய நிசப்தத்தைக் கவனித்தார். ‘வீட்டில் யாருமில்லையா?’ என்று தயக்கத்துடன் கேட்டார்.

‘என்னைப் பார்த்தால் மனுஷியாகத் தெரியவில்லையா?’ என்று கேட்டேன்.

தலையைக் குனிந்து கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தார்.

காபி போட்டுத் தந்தேன்.

‘மத்தியானம் சாப்பிட்டீர்களா?’ என்று கேட்டேன்.

ஆமென்பது போல தலையாட்டினார்.

‘பயிற்சியில் சேர்ந்தாகி விட்டதா?’ என்று கேட்டேன்.

ஆமென்பது போல தலையாட்டினார்.

‘பத்து ரூபாய்தானே வைத்திருந்தீர்கள். எப்படி சாப்பிட்டீர்கள்?’ என்று கேட்டேன்.

‘அலுவலகத்தில் ஒருவர் சாப்பாடு தந்தார்’ என்றார்.

‘பயிற்சி கட்டணம்?’ என்று கேட்டேன்.

‘ஒரு பெண் கொடுத்துதவினார்’ என்றார்.

என்னுள் கடுமையான கோபம் எழுந்தது. பணமில்லையென்றால் என்னிடமோ, அப்பாவிடமோ கேட்டிருக்கக் கூடாதா?

மேற்கொண்டு அவரோடு பேசாமல் என் அறைக்குச் சென்று-விட்டேன்.

அம்மா திரும்பி வரும் வரை அவர் கூடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார்.

## 15. வம்சியின் பார்வை

நான் அலுவலகத்திற்குள் நுழைந்த போது என் வயதிருக்கும் ஒருவன் வாடிக்கையாளர்கள் அமரும் மெத்தை நாற்காலியின் நுனியில் எந்த வினாடியும் கீழே விழுந்துவிடுவானோ என்பது போல உட்கார்ந்திருந்தான். வெளியூர்காரன் போலிருந்தான். மிக எளிய, சுத்தமான ஆடைகளை அணிந்து கொண்டு பதட்டத்துடன் இருந்தான். குளிரூட்டப்பட்ட அறை, மேல்நாட்டு மோஸ்தரில் அலங்கரிக்கப்பட்ட அலுவலகம், மெத்தை நாற்காலிகள், கம்பளி விரிப்புகள், கம்ப்யூட்டர்கள், ஆங்கிலத்தில் பேசிக் கொள்ளும் தமிழர்கள் என்ற பல்முனைத் தாக்குதல்களால் நிலைகுலைந்து போயிருந்தான். யாரும் அவனை கவனித்ததாகவோ, பொருட்-படுத்தியதாகவோ தெரியவில்லை.

அவனருகில் சென்று புன்னகைத்தேன்.

பதட்டத்தோடு எழுந்து நின்று 'என் பெயர் தத்தாத்ரேயன். தத்தா என்று கூப்பிடுவார்கள். உங்களிடம் சேர்ந்து சிஏ படிப்பிற்கு பயிற்சி பெற வந்திருக்கிறேன். பகுத்தறிவு சார் அனுப்பி வைத்தார்' என்று படபடப்புடன் கூறினான். 'என்னை சேர்த்துக் கொள்ளுங்கள். இடமில்லை என்று கூறிவிடாதீர்கள்' என்ற கெஞ்சல் அவன் வார்த்தைகளுக்கு பின்னாலிருந்ததை உணர்ந்தேன்.

'உட்காரப்பா' என்று கூறி விட்டு அவன் தந்த பகுத்தறிவு சாரின் சிபாரிசு கடிதத்தையும், அவனுடைய சான்றிதழ்களையும் பார்த்தேன். மிகவும் நல்ல மதிப்பெண்கள் வாங்கி இருந்தான்.

'தத்தா, நீ நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறாய். உடனே இந்தப் படிப்பில் சேர்ந்து விடலாம். ஒரு பிரச்சனையும் இல்லை' என்றேன்.

'மிகவும் நன்றி சார். நான் என்றும் உங்களுக்கு உண்மையாகவும், நன்றியுடனும் இருப்பேன்' என்று தழுதழுத்த குரலில் கூறினான் தத்தா.



பின்னாலிருந்து எங்களோடு பயிற்சி பெறும் மந்திரா சிரிக்கும் ஒலி கேட்டது. 'தத்தா, நீ வம்சிக்கு நன்றியோடு இருக்க வேண்டிய அவசியமே இல்லை. அவனும் உன்னைப் போல படித்துக் கொண்டுதான் இருக்கிறான். ஆடிட்டர் சார் பத்து மணிக்கு வருவார். அவர்தான் உன்னை சேர்ப்பதா இல்லையா என்று முடிவெடுப்பார்' என்றாள்.

பத்து மணிக்கு எங்கள் அலுவலகத் தலைவர் செந்தில்நாதன் வந்தார். எந்த சம்பளமும் கேட்காமல் தூங்கும் நேரம் தவிர மீதி எல்லா நேரமும் வேலை பார்க்கக் கூடிய அப்பாவி என்பதை தத்தாவை பார்த்தவுடனே புரிந்து கொண்டார். உடனே அவனை அலுவலகத்தில் சேர்த்துக் கொண்டு விட்டார்.

'வம்சி, என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று இவனுக்கு சொல்லிக் கொடு' என்றார்.

பயிற்சியில் சேரத் தேவைப்படும் படிவங்களை நிரப்பி கையெழுத்துகளை வாங்கினேன்.

தத்தா பயிற்சிக் கட்டணத்தைப் பார்த்து திடுக்கிட்டான். 'படிப்பு இலவசமில்லையா?' என்று தயக்கத்துடன் கேட்டான். அவனுடைய நிதி நிலைமை அப்போதுதான் எனக்குப் புரிய ஆரம்பித்தது.

'குறைவான கட்டணம்தான். இது தவிர தேர்வுக் கட்டணம் உண்டு. வேறு செலவுகள் இல்லை' என்றேன்.

'பயிற்சிக்கான ஊதியத்தை தராவிட்டாலும் பயிற்சிக் கட்டணத்-தையாவது, நம் சார் கொடுக்கலாம்' என்று வருத்தப்பட்டாள் மந்திரா.

'சார், நான் இப்போது இங்கே சேர்ந்து கொள்கிறேன். பணம் கிடைத்த பின் முறைப்படி பதிவு செய்து கொள்கிறேன்' கிடைத்த வாய்ப்பை தக்க வைத்துக் கொள்ளும் தவிப்போடு பேசினான் தத்தா.

'சந்துரு உன்னிடம் பணம் ஏதேனும் இருக்கிறதா?' என்று கேட்டேன்,

'வீட்டில் இருக்கிறது. நாளை கொண்டு வருகிறேன்' என்றான் சந்துரு,

‘வம்சி, எவ்வளவு பணம் வேண்டும்?’ என்ற குரல் கேட்க மூவரும் திரும்பிப் பார்த்தோம். ஆடிட்டரை பார்க்கும் சாக்கில் என்னைப் பார்க்க வந்திருந்த வாத்சல்யாதான் கேட்டவள்.

தொகையைச் சொன்னதும் தன் கைப்பையிலிருந்து அதைவிட கூட அதிகமான பணத்தை எடுத்துத் தந்தாள் வாத்சல்யா. அதை வாங்கிக் கொள்ள தத்தா தயங்கினான். தன் நிலையை எண்ணி எழுந்த சுய கழிவிரக்கமும், அவமானமும் அவன் முகத்தில் தெரிந்தன.

நான் வாத்சல்யாவிடம் பணத்தை வாங்கிக் கொண்டேன்.

‘ஏன் பதறுகிறாய்? நீ பணத்தை வாங்கிக் கொள்ளாவிட்டால் வாத்சல்யா கண்ணீர் விட ஆரம்பித்துவிடுவாள்’ என்று கூறிவிட்டு பியூன் பழனிச்சாமியிடம் படிவத்தையும், பணத்தையும் தந்தேன்.

‘சார், நான் கூடிய விரைவில் பணத்தை திருப்பித் தந்துவிடுகிறேன். மிகவும் நன்றி என்று அக்காவிடம் சொல்லி விடுங்கள்’ என்று வாத்சல்யாவைப் பார்க்காமல் என்னிடம் கூறினான் தத்தா.

‘அவள் உன்னை விட வயதில் சிறியவள். அக்கா இல்லை. என்னையும் வம்சி என்றே கூப்பிடு’ என்றேன்.

‘சரி சார்’ என்றான் தத்தா.

வாத்சல்யா புன்னகைத்து விடைபெற்றாள்.

அவனுக்கு அலுவலக நடைமுறைகளை சொல்லித் தந்தேன். பின் டெலிபோன் டைரக்டரியை எடுத்து முதல் பத்து பக்கங்களிலுள்ள தொலைபேசி எண்களை கூட்டச் சொன்னேன்.

திகைத்தான் தத்தா.

‘உனக்கு எண்களோடு நல்ல உறவும், நட்பும் உண்டாக வேண்டுமென்றால் இதுதான் வழி. அடுத்த மூன்று நாட்களுக்கு இதைத்தான் செய்ய வேண்டும்’ என்றேன்.

தத்தா பென்சிலை எடுத்து தொலைபேசி எண்களை கூட்டத் தொடங்கினான்.

★ ★ ★ ★



## 16. சந்துருவின் பார்வை

இறைவன் உலகைப் படைக்கவில்லை. எண்ணற்ற உருவங்கள் கொண்ட படைப்பாக தன்னை காட்டிக் கொள்கிறான். அது உண்மை என்றால், எதிர்பாராமல் சந்திக்கும் மகத்தான மனிதர்கள், குரைத்தபடி குப்பையை கிளறும் தெருநாய்கள், இடைவிடாமல் கூவும் குயில்கள், தெருவில் பிறருக்கு புரியாத அற்புத கவிதைகளைப் பிதற்றியபடி தள்ளாடி நடக்கும் குடிப்பிரியர்கள், இரைச்சலோடு ஓடும் வண்டிகள், மௌனமாக நிற்கும் மரங்கள், பூக்கும் மலர்க் கொடிகள், பட்டுப்போன மரங்கள் எல்லாமே, எல்லாமே, எல்லாமே இறைவன்தான். அனைத்தும், அனைவரும் சமமே.

பள்ளியில் படிக்கும்போது பொற்குன்றன் எனக்கு தமிழாசிரியராக அமைந்தார். அனைவரும் சமம் என்று அவர்தான் சொல்லித் தந்தார். தமிழ் மீது கொண்ட அன்பால் தமிழ் கற்றவர். தமிழார்வம் கொண்டவர்களுக்கும் பசிக்கும்தானே? அதனால் ஆசிரியராக வேலை பார்த்து வந்தார்.

வகுப்பில் நுழைந்த முதல் நாளே ‘தமிழ் பாடம் பிடிக்காதவர்களெல்லாம் வெளியே போய் மகிழ்ச்சியாக இருங்கள். எல்லோரும் வகுப்பிற்கு வந்ததாக பதிவு செய்து விடுகிறேன்’ என்றார். அடுத்த கணம் ஆறேழு மாணவர்களே வகுப்பில் எஞ்சினோம்.

‘அவர்கள் உருப்படமாட்டார்கள். எங்களுக்கு பாடம் எடுங்கள்’ என்றான் முருகவேள்.

‘அப்படியெல்லாம் எவரையும் குறை சொல்லக் கூடாது! எல்லோருமே சமம்தான்’ என்றார் பொற்குன்றன்.

‘அதெப்படி? படிப்பவனும், படிக்காதவனும் எப்படி சமமாக முடியும்?’ என்று வாதமிட்டான் முருகவேள்.

‘தம்பி, என் தங்கக் கம்பி! நாம் எதற்காக படிக்கிறோம்? பொழுதுபோகவா? அறிவாளியாகவா? அகந்தையை வளர்த்துக் கொள்ளவா? சம்பாதிக்கவா? இல்லை. வாழ்வைப் புரிந்து கொள்ளத்தான் எதையும் படிக்கிறோம். எதையும் செய்கிறோம். அறிதலும், இருத்தலுமே வாழ்க்கை. அறிய வேண்டியதை அறிந்து, இருக்க வேண்டியபடி இருத்தலே மனித லட்சியமாக இருக்க வேண்டும்’ என்றார் பொற்குன்றன்.

‘நாங்கள் அறிய வேண்டியது என்னவென்று சொல்லுங்கள் சார்’ என்று கேட்டான் முருகவேள்.

‘அப்படிக் கேளடா என் சிங்கக் குட்டி. மின்னலால் அதிரும் வானம் பொழியும் குளிர்ந்த மழை மலைப் பாறைகளில் விழுந்து விரியும் பெரிய நதியின் மீது தோணி தன் போக்கில் மிதந்து செல்வதைப் போல நம் எல்லோருடைய வாழ்வும், உயிரும் நம்மை விட பெரிய சக்தியின் ஆற்றலின் ஓட்டத்தில் மிதந்து சென்று கொண்டிருக்கின்றன. எவருடைய உயிரும் பிறருடைய உயிரைவிட உயர்ந்ததில்லை. எவருடைய வாழ்வும் பிறருடைய வாழ்வைவிட தாழ்ந்ததில்லை. அவரவர் அறத்தின்படி வாழ்வில் மிதந்து சென்று கடலை சேரப் போகிறோம். ஒரு பிடி உப்பும் கடலில் கரைந்து ஒன்றுமில்லாமல் ஆகப் போகிறது. ஒரு வண்டி உப்பும் கடலில் கரைந்து ஒன்றுமில்லாமல் ஆகப்போகிறது. அதனால் நம்மைவிட பெரியோர் என்று எண்ணி வியந்து பிறரை வணங்கி நிற்க வேண்டாம். அதைவிட முக்கியமாக நம்மைவிட தாழ்ந்தவர்கள் என்று ஏளனமாக எண்ணி பிறரை இகழவும் வேண்டாம். நம் அறம் என்னவோ அதை அறிந்து அதன்படி மட்டுமே வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் நாம் நம் அகத்திலும், புறத்திலும் எப்படி வாழ்கிறோமோ அதை ஒட்டி நமக்கு நன்மைகளும், தீமைகளும் கிடைக்கும். பிறரால் நமக்கு நல்லதும் செய்ய முடியாது, கெடுதலும் செய்ய முடியாது. நம் வாழ்வை நிர்ணயிப்பவர்கள் நாமே. எவரும் நமக்கு எதிரிகள் அல்ல என்பதால் எல்லோரையும் நம் உறவினர்களாகக் கருதுவோம். எல்லா தேசங்களையும் நம் தேசமாகவே கருதுவோம்’ என்றார் பொற்குன்றன்.

‘அப்படியானால் நீங்களும் நானும் சமமா? குருவும் சீடனும் சமமா?’ என்று கேட்டான் முருகவேள்.

‘ஆமாம். எல்லோருமே, எல்லாமே சமம்தான். அரசனும், ஆண்டியும், வீரனும், கோழையும், இருளும், ஒளியும், கள்வனும், காவலனும், பரத்தையும், பத்தினியும், பண்டிதனும், பாமரனும், பிறந்தவனும், இறந்தவனும், ஜடமும், பிரம்மமும் சமமே. பூங்குன்றனார் எழுதிய பாட்டின் அர்த்தத்தைதான் நான் உங்களுக்கு சொன்னேன். வாழ்க்கையில் எப்போதும் அதை நினைவில் வைத்திருங்கள். எதையும் சமமாக பாவிக்கும் பக்குவம்



உங்களுக்கு தானாகவே வந்துவிடும். அப்போது மனதில் நிம்மதி மட்டும்தான் இருக்கும்’ என்றார் பொற்குன்றன்.

நான் இலக்கியத்தில் மூழ்க ஆரம்பித்தபோது உயர்ந்த இலக்கியம், தாழ்ந்த இலக்கியம் என்ற பாகுபாடுகளை தராதரங்களைக் கொண்டிருந்தேன், பொற்குன்றன் ஆசிரியராக வந்தபின் அவரவர் நிலைக்குரிய இலக்கியத்தை அவரவர் வாசிக்க வேண்டும். எதையும், எவரையும் குறை கூறக்கூடாது என்ற தெளிவு வந்தது.

அதனால் நான் எதிர்பாராத இன்னொரு நன்மை விளைந்தது. எல்லோரும் என்னை சமநிலை தவறாதவன் என்று நினைக்க ஆரம்பித்து விட்டனர். அடுத்தவர்கள் தாமாகவே என்னைப் பற்றி உயர்வாக பேசும் போது அதை ஏன் மறுக்க வேண்டும் என்று நானும் பேசாதிருந்து விட்டேன். பல சமயங்களில் அகக் கொந்தளிப்பு ஏற்படுவது உண்டு என்றாலும் பொற்குன்றன் சொல்லிக் கொடுத்த பூங்குன்றனாரின் பாடல் பிரச்சனைகளைத் தீர்க்க உதவியாக இருந்து கொண்டேதான் இருக்கிறது.

அரசாங்க அதிகாரியாக இருந்த என் அப்பா, கடன் கடலில் சிக்கித் தடுமாறியபோது, என்னை உற்சாகமாக வைத்திருந்து வீட்டுச் சூழலை மிக எளிதாக மாற்ற உதவியது இப்பாடல்தான்.

ஆனாலும், ஆணை விட பெண் ஒருபடி மேலானவள் என்ற என் கருத்தை, இப்பாடலால் மாற்ற முடியவில்லை.

பெண்களின் அருமையும், பெருமையும் பிரம்மச்சாரிகளுக்குத்-தான் தெரியும்.

கட்டுப்பாடற்ற நண்பர்களோடு, ஒழுங்காக அடுக்கி வைக்கப் படாத பொருட்களுக்கு மத்தியில், குப்பை கூளங்களின் மேல் உட்கார்ந்து, சரியாகக் கழுவப்படாத தட்டுகளில், உணவு விடுதியில் வாங்கிய அல்லது தாங்களே சமைத்த மோசமான, உணவை உண்ண வேண்டிய அவலமான வாழ்க்கையை வாழும் இளம்வயது பிரம்மச்சாரிகளுக்கு பெண்களின் அருமையும், பெருமையும் மிக மிக நன்றாகத் தெரியும்.

பட்டய கணக்காளர் என்று நல்ல தமிழிலும், சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் என்று ஆங்கிலத்திலும் அழைக்கப்பட்ட, படிப்பை படிப்பதற்காக அப்போதுதான் சேர்ந்திருந்தேன்.

அப்போதுதான் ஒரு மருத்துவமனையில் புதிதாக வேலைக்கு சேர்ந்திருந்த என் அண்ணனும், தம்பியும், அப்போதுதான் அரசாங்க வேலையில் சேர்ந்திருந்த ஒன்றுவிட்ட அண்ணன் நந்துவும் சூளைமேட்டில் இருந்த அடுக்குமாடி குடியிருப்பு வீடு ஒன்றில் குடியிருந்தோம். அது அப்பாவின் சொந்த வீடு.

திரை கடலோடி திரவியம் தேடி, வாங்கிய கடனை திருப்பிக் கட்டுவதற்காக என் அப்பா சவூதி அரேபியாவிற்குச் சென்றார். போகும்போது அம்மாவையும் கையோடு அழைத்துச் சென்று விட்டார். 'பெண் குழந்தைகள் இருந்தால் பயப்படலாம். அந்தக் கொடுப்பினை எனக்கில்லை. தடிமாடுகள் போல மூன்றும் ஆண்பிள்ளைகள். எங்கேயாவது சாப்பிட்டுக் கொள்வார்கள்' என்று அன்போடு சொல்லிவிட்டு அம்மா அரேபியா சென்று விட்டார்.

அப்பா அனுப்பும் பணத்திற்கு நான்தான் காசாளன், கணக்காளன். அதனால் மற்றவர்களைவிட அதிகமான பொறுப்பும், அதிகாரமும் எனக்கிருந்ததாக நானே நம்பிக் கொண்டிருந்தேன். என் சகோதரர்களுக்கு அதுபோன்ற தவறான நம்பிக்கைகள் எதுவும் இல்லை.

முதல் மாதம் வாழ்க்கை வெகு நன்றாக இருந்தது. ஒவ்வொரு வேளையும் புதுப்புது உணவு விடுதிகளில் சாப்பிட்டோம். எப்போது வேண்டுமானாலும் வீடு திரும்பினோம். எப்போது வேண்டுமானாலும் தூங்கினோம், எப்போது வேண்டுமானாலும் எழுந்தோம். சில நாட்கள் எழுந்திருக்காமலே கூட இருந்தோம்.

நாளிதழ்களையும், படுக்கை விரிப்புகளையும், போர்வை-களையும் மடித்து வைக்க மாட்டோம். தூங்கும்போது எறும்பு கடிப்பது போலிருந்தால் 'அடடா, இன்று படுக்கையில் உட்கார்ந்து கொண்டு தெருவோரக் கடையில் வாங்கிய அதிரசங்களை உதிர்த்துக் கொண்டே தின்றோமே' என்று தோன்றும். எறும்பை தட்டிவிட்டு மீண்டும் தூங்கி விடுவோம். மறுநாள் மீண்டும் படுக்கையில் உட்கார்ந்து கொண்டே தெருவோரக் கடையில் வாங்கிய அதிரசங்களை சாப்பிடுவோம்.

பாத்திரங்கள் தொடமுடியாத அளவிற்கு பிசுபிசுவென்று ஆகிவிட்டன. சில முறை தொட்டபின் உடல் பிசுபிசுப்பை ஏற்றுக்



கொண்டது, குப்பைத்தொட்டி எப்போதும் நிரம்பி வழியும். ஆரம்பத்தில் அதிலிருந்து வந்த அழுகிய வாசம் குமட்டலைத் தந்தாலும் போகப்போக அதுவும் எங்கள் வாழ்வின் பகுதியாகி-விட்டது.

முதல் முறை தவறு செய்யும்போது, முதல் முறை யாருக்காவது துரோகம் செய்யும்போது, முதல் முறை லஞ்சம் கொடுக்கும்போது, அறவுணர்வில் மனம் பதட்டமடையும். பழகியபின் தவறு செய்தால்தான் நிம்மதியாக தூங்க முடிகிறது. 'எல்லோரும் செய்வதை நாமும் செய்தால்தான் வாழ முடியும். ஊரோடு ஒத்து வாழ் என்று பெரியவர்கள் சொன்னதை பின்பற்றவேண்டாமா?' என்று நம்மை நாமே சமாதனம் செய்து கொண்டால் கணக்கு சரியாகி விடாதா?

எங்கெல்லாம் மறைவிடம் உண்டோ அங்கெல்லாம் கரப்பான் பூச்சிகள் குடும்பம், குடும்பமாகத் வாழ ஆரம்பித்துவிட்டன. விட்டமும், மூலைகளும் வீணாகப் போகின்றனவே என்று கவலைப்பட்ட சிலந்திப்பூச்சிகள் வலைகள் கட்டிவிட்டன. வீடே ஒட்டடைமயமாகி விட்டது.

வேலைக்காரி என்ற பெயரில் ஒரு பெண்மணி நினைத்தபோது வருவாள். மற்ற வீடுகளில் தருவதைவிட இரண்டு மடங்கு அதிக சம்பளம் தந்தோம். அவள் வீட்டை தளுக்காகக் கூட்டியபின், தரை முன்பிருந்ததை விட அதிக அழுக்காக இருக்கும்! துணிகளை புதிதாகப் பிறந்த குழந்தைகள் என்ற நினைப்பில் அவற்றிற்கு சிறிதும் நோகாமல் லேசாகத் தொட்டு ஆசிர்வதித்து விட்டு, தண்ணீரைத் தெளித்து காயப் போடுவாள். வியர்வை வாசம் அப்படியே இருக்கும். துணிகளின் உண்மையான நிறம் என்ன என்பது எங்களுக்கு மறந்து போய்விட்டது.

பொறுக்கவே முடியாத நிலை வரும்போது பயந்துகொண்டே, 'ஏனம்மா, இன்னும் கொஞ்சம் நன்றாக பெருக்கக் கூடாதா? அழுக்கு போக துவைக்கக் கூடாதா?' என்றால் அவ்வளவுதான். 'ஏதோ தெரிந்த பிள்ளைகள் ஆச்சே என்பதால்தான் தடிதடியாக ஆண்பிள்ளைகள் இருக்கும் இந்த வீட்டிற்கு பெண்ணான நான் வேலைக்கு வருகிறேன். வேறு எவளும் வரமாட்டாள். இன்றோடு கணக்கைத் தீர்த்து விடுங்கள்' என்று சத்தம் போட்டுவிட்டுப் போய்விடுவாள்.

இரண்டு நாட்கள் வேலைக்கு வரமாட்டாள். எங்கள் நிலைமை படுமோசமாகி விடும். காவல்கார கிருஷ்ணனை தூதனுப்பி அவளை மீண்டும் வேலைக்கு வரச் சொல்வோம். காவல்கார கிருஷ்ணனும், வேலைக்காரியும் கூட்டுக் களவாணிகள் என்பதால் வேறு யாரையும் வேலைக்கு வைத்து விட முடியாது.

நந்தண்ணன் அவ்வபோது சினிமா இதழ்களை அலுவலகத்-திலிருந்து கொண்டு வருவார். அதன் நடுப்பக்கத்தில் அதிகமான ஊதியம் பெற்றதால் குறைவான உடையணிந்திருக்கும் பெண்-களின் கவர்ச்சிப்படம் வெளிவரும். பார்ப்பதற்கு உற்சாகமாக இருக்கும். 'அம்பாள் உபாசகன். ஆன்மீக வழியில் செல்பவன், இப்படிப்பட்ட படங்களை எல்லாம் பார்க்கக் கூடாது' என்று தோன்றினாலும், பார்க்காமல் இருக்க முடியாது. பார்த்தபின் அம்பாளிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வேன். என்னை எண்ணற்ற முறைகள் அம்பாள் மன்னித்து இருக்கிறாள்.

அம்மா இருந்தால் இதெல்லாம் நடக்குமா?

ஒருநாள் நந்தண்ணன், 'தம்பிகளா! நமக்கென்ன குறைச்சல்?' நாம் ஏன் இப்படி கஷ்டப்பட வேண்டும்? வீட்டோடு ஒரு சமையல்காரனை வைத்தால் என்ன? சமையலோடு வீட்டையும் பார்த்துக் கொள்ளட்டும்' என்று வாழ்க்கையிலேயே முதல்-முறையாக ஒரு உருப்படியான யோசனையைச் சொன்னார். அதை எல்லோரும் வரவேற்றோம்.

முதலில் வந்த சமையல்காரப் பெரியவர் தன் கைவண்ணத்தைப் பற்றி பிரமாதமாக, சுவையாக விளக்கினார். அதைக் கேட்கும்-போதே நாக்கு உணவை எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டது, அவர் சொன்னதை நாங்கள் முழுமையாக நம்பினோம். ஆனால் அவர் வைத்த முருங்கைக்காய் சாம்பார், வெங்காய சாம்பார், மீன் குழம்பு, கோழி குழம்பு, மோர் குழம்பு, பூண்டு ரசம், மிளகு ரசம், எலுமிச்சை ரசம் ஆகிய எல்லாமே எந்த வித்தியாசமும் இல்லாமல் தீய்ந்து போன காரக்குழம்பு சுவையில் இருந்தன. எனவே, ஒரே வாரத்தில் அவருக்கு ஒரு மாத சம்பளத்தைக் கொடுத்து வழி அனுப்பி வைத்து விட்டோம்.

இவரை கண்டுபிடித்துக் கொண்டுவந்த நந்தண்ணன், 'நானே எல்லா பொறுப்புகளையும் ஏற்க வேண்டியிருக்கிறதே! நீங்கள்



யாரும், எதுவும் செய்ய மாட்டீர்களா?' என்று கோபித்துக் கொண்டார்.

எனவே, என் அண்ணன் சுந்தர் ஒரு சமையல்கார இளைஞனைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தார். புதிய சமையல்காரன் 'வெளியூரிலிருந்து வருகிறேன். இன்று நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டு நாளையிலிருந்து சமையல் செய்கிறேன். இன்று எனக்கும் சேர்த்து ஒரு பிளேட் கோழி பிரியாணி வாங்கி வந்து விடுங்கள்' என்றான்.

'மனிதன் என்றால் அலுப்பு இருக்காதா? நியாயமான கோரிக்கை-தானே!' என்று நினைத்தபடி பையெடுத்துக் கொண்டு கிளம்பினேன். 'சார், அப்படியே வஞ்சரமீன் வறுவலும், முட்டைப் பொடிமாசும் வாங்கி வந்துவிடுங்கள். எனக்கு ஆட்டுக்கறி அவ்வளவாக ஒத்துக் கொள்ளாது' என்றான்.

'சரி' என்று கூறி விட்டு நான் படியிறங்கிய பின், பால்கனி-யிலிருந்து கை தட்டி அழைத்து, 'இரண்டு ரஸ்தாளி வாழைப் பழங்களும் வாங்கி வந்து விடுங்கள். பச்சைப் பழம் வேண்டாம்' என்றான். 'அதுவும் சரிதான்' என்று நினைத்துக் கொண்டு அவன் கேட்டதையெல்லாம் வாங்கி வந்து தந்தேன்.

திருப்தியாக உண்டு விட்டு நிம்மதியாகத் தூங்கினான்.

மறுநாள் காலையில் நான் ஆறுமணிக்கு எழுந்தபோது சமையலறையில் அவன் படுக்கை காலியாக இருந்தது. சமையலறையும் காலியாக இருந்தது! நாங்கள் கைக்கடிகாரங்கள், பணப்பைகள் வைக்குமிடங்களும் காலியாக இருந்தன. சமையல்-காரன் காற்றில் கரைந்து விட்டான். திருட வந்தவனுக்கு விருந்து வைத்தவன் உலகிலேயே நான் ஒருவனாகத்தான் இருப்பேன்.

அதிர்ச்சியிலிருந்து நாங்கள் மீண்டபின் என் தம்பி புதிய யோசனை சொன்னான். 'ஆண்களை நம்பமுடியாது. அயோக்கியர்கள்! பெண்-களைத்தான் நம்பமுடியும் எனவே, அடுத்தபடியாக சமையல்-காரியைத்தான் வேலைக்கு சேர்க்க வேண்டும்' என்றான்.

எங்கள் அனைவருக்கும் 'அதுதான் சரி' என்று தோன்றியது.

காவல்கார கிருஷ்ணனையே ஒரு பெண்ணை சமையலுக்கு சேர்த்துவிடச் சொல்லி, நூறு ரூபாய் அன்பளிப்பும் தந்தோம்.

சமையல் வேலைக்கு ஆள் கேட்டதால், வேலைக்காரி எந்தவிதமான ஆட்சேபணையும் கிளப்பவில்லை.

அடுத்தநாள் மதியம் வீட்டில் நான் மட்டும் தனியாக இருந்தபோது அழைப்புமணி ஒலித்தது.

ஒரு பெண் வாசலில் நின்றிருந்தாள். வயது இருபத்தைந்திற்குள்தான் இருக்கும். ஆரஞ்சுவர்ண சேலையும், வெளிர்கனகாம்பர நிற ரவிக்கையும் அணிந்திருந்தாள். இடதுகையில் கடிகாரம் கட்டி, வலது கையில் ஒரு நெளிவளையல் அணிந்திருந்தாள். மெல்லிய தங்க சங்கிலி அவளது கழுத்தால் அழகு பெற்றிருந்தது. காதுகளில் சிறு தங்க வளையங்கள். அமைதியான முகம். அழகான தெளிவான கண்கள். நெற்றியில் குட்டியாக வட்டப் பொட்டு. காலியாக இருந்த கீழ்வீட்டிற்கு புதிதாக குடி வந்திருக்கிறாளா?

‘சமையல் வேலைக்கு ஆள் வேண்டும் என்று சொல்லியிருந்தீர்களாமே?’ என்றாள் அப்பெண்.

‘ஆமாம். உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?’ என்று கேட்டேன்.

‘நான்தான் அந்த வேலைக்கு வந்திருக்கிறேன்’ என்றாள்.

துணுக்குற்றேன். சமையல்காரி போலவோ, வேலைக்காரி போலவோ தெரியவில்லை. இளம்வயதில் என் அம்மா, பெரியம்மா, சின்னம்மா எல்லாம் இவளைப் போலத்தான் இருந்திருப்பார்கள்.

‘நாங்கள் நான்கு ஆண்கள் மட்டும் இருக்கிறோம்’ என்று எங்களைப் பற்றி சொல்ல ஆரம்பித்தேன்.

‘எல்லா விவரங்களும் கிருஷ்ணன் சொன்னார். எனக்குப் பூரண சம்மதம்’ என்று ஆங்கிலத்தில் சொன்னாள்.

‘உங்களைப் பற்றி சொல்லுங்களேன்’ என்றேன்.

‘என் பெயர் பூரணி. நான் நன்றாக சமைப்பேன். மேற்கொண்டு வேறெதுவும் என்னைப் பற்றி சொல்ல விரும்பவில்லை. நீங்கள் எதுவும் கேட்காமலிருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். நான் எந்த பொய்யும் சொல்ல விரும்பவில்லை. உண்மை மட்டுமே பேச விரும்புகிறேன்’ என்றாள்.



வாழ்ந்து கெட்ட பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள் போலிருக்கிறது. அதனால்தான் சொந்த விவரங்களைக் கூற இந்த அளவு தயங்குகிறாள் என்று தோன்றியது.

பூரணியை எனக்குப் பிடித்திருந்தது. அவளிடமிருந்து இனிமையான அதிர்வுகள் வந்தன. ‘உண்மை மட்டுமே பேச விரும்புகிறேன்’ என்று ஒரு பெண் சொல்லிய பின் மேற்கொண்டு விசாரிக்க என்ன இருக்கிறது? எனக்கு விசாரிப்பது அவசியமென்று படவில்லை.

‘உள்ளே வாருங்கள்’ என்றேன்.

வந்தாள்.

‘என்ன சம்பளம் எதிர்பார்க்கிறீர்கள்?’ என்று கேட்டேன்.

‘மாதம் ஆயிரம்’ என்றாள். இந்த சம்பவம் நடந்த காலத்தில் மாதம் ஆயிரம் என்பது ஓரளவு நல்ல சம்பளம்தான்,

நான் யோசித்தேன்.

‘அதிகம் என்று நினைக்கிறீர்களா?’ என்று கேட்டாள்.

‘இல்லை. குறைவாக இருக்கிறதே என்று யோசித்தேன். வேலைக்காரிக்கே ஆயிரம் தருகிறோம்’ என்றேன்.

‘ரொம்ப அதிகம். உங்களை ஏமாற்றுகிறார்கள்’ என்றாள்.

‘ஏமாற்றவில்லை. வேறு வழியில்லாமல் நாங்கள் தெரிந்தே ஏமாறுகிறோம். நாங்கள் ஆண்களாக இருக்கிறோம். பரவாயில்லையா?’ என்று கேட்டேன்.

‘எனக்கு ஆண்களிடம் பயமொன்றுமில்லை. நீங்கள் பயப்படாமல் இருந்தால் சரி’ என்றாள் பூரணி.

‘நீங்கள் பெண்தான். ஆனால், தனியறை தருவதற்கில்லை. சமையலறையில்தான் நீங்கள் தூங்க வேண்டியிருக்கும்’ என்றேன்.

‘பெரும்பாலான பெண்களுக்கு சமையலறைதான் உலகமாக இருக்கிறது’ என்றாள் பூரணி.

‘நீங்கள் எப்போது வேலையில் சேர்வீர்கள்?’ என்று கேட்டேன்.

‘நீங்கள் உள்ளே அழைத்ததும், என்னை வேலைக்கு எடுத்துக் கொண்டு விட்டீர்களாக்கும் என்று நினைத்துவிட்டேன்!’ என்று கூறி சிரித்தாள் பூரணி.

வீட்டைச் சுற்றிப் பார்த்தாள். 'என்ன இது! வாழும் வீட்டை பாழும் கிணறு போல் வைத்திருக்கிறீர்களே!' என்றாள்.

ஒரு காகிதமும் பேனாவும் எடுத்து பெரிய பட்டியல் எழுதினாள். அழகான கையெழுத்து. 'இந்த சாமான்களையெல்லாம் வாங்கி வர முடியுமா?' என்றாள்.

'அந்த வேலையெல்லாம் எனக்குப் பழக்கமில்லை. நான் கடைக்குப் போனால் ஐந்து ரூபாய் பழத்தை ஐம்பது ரூபாய் விலை சொல்வார்கள். என் திருமுகராசி அப்படிப்பட்டது' என்றேன்.

சிரித்தாள். 'அப்படியானால் நானே வாங்கி வந்து விடுகிறேன். இரண்டாயிரம் ரூபாய் கொடுங்கள்' என்றாள்.

பணத்தை எடுத்து பவ்வியமாக நீட்டினேன். அவளை ஒரு கணம் கூட என் மனம் சந்தேகப்படவில்லை.

'நான் பொருட்களை வாங்கிக் கொண்டு தெரிந்தவர்கள் வீட்டிலிருக்கும் என் பெட்டியை எடுத்து வந்துவிடுகிறேன்' என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

'ஆட்டோ அல்லது பஸ்ஸிற்கு உங்களுக்கு பணம் தேவை என்றால் நான் கொடுத்த பணத்திலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்' என்றேன்.

என்னைப் பார்த்து பிரியத்துடன் புன்னகைத்துவிட்டு சென்றாள்.

மாலையில் வீடு திரும்பிய என் சகோதரர்கள் என்னை கேலி செய்து சிரித்தார்கள்.

'போன பணம் போனதுதான்!' என்றான் தம்பி.

'பெண்ணைப் பார்த்ததும் மயங்கிப் போய் பணத்தைத் தூக்கி கொடுத்துவிட்டான்!' என்றார் நந்தண்ணன்.

அப்பாவிடம் சொல்லி நிதி மந்திரி பதவியிலிருந்து என்னை விலக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள். ஆனால் எனக்கென்னவோ யார் எதைச் சொன்னாலும் அப்பெண் மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருந்து கொண்டுதானிருந்தது.

ஆறு மணி அளவில் விளக்கு வைக்கும் நேரத்தில் பூரணி ஒரு சைக்கிள் ரிக்ஷா நிறைய பலவிதமான பொருட்களோடும், தன் பெட்டியோடும் வந்து இறங்கினாள். ஒட்டடைக் குச்சி, துடைப்பம்,



பினாயில், காய்கறி, பழங்கள், அரிசி, பால், சில சிறிய பாத்திரங்கள் என்று ஏதேதோ இருந்தன. அவற்றை வீட்டிற்குள் எடுத்து வர நான் உதவினேன்.

எல்லோருக்கும் பொதுவாக வணக்கம் சொன்ன பூரணி, 'மன்னித்து கொள்ளுங்கள். தாமதமாகிவிட்டது' என்றாள்.

'விளக்கு வைக்கும் நேரம் மகாலட்சுமி வரும் நேரமாச்சே!' என்று ஒரு போடு போட்டார் நந்தண்ணன்.

'வீட்டை சுத்தம் செய்வதுதான் முதல் வேலை. எல்லாவற்றையும் சரி செய்து காலையில் குப்பையை வெளியே கொட்டிவிடலாம். நாளையிலிருந்து சமையலை ஆரம்பிக்கிறேன். இன்று இரவு மட்டும் சாப்பாடு வெளியே வாங்கிக் கொள்ளலாம்' என்றாள் பூரணி.

'என்ன வேண்டும்? நான் வாங்கி வருகிறேன். சந்துருவிற்கு சரியாக வாங்கத் தெரியாது' என்று பையை எடுத்துக் கொண்டு உற்சாகமாகக் கிளம்பினார் நந்தண்ணன். நாங்கள் வழக்கம் போல பிரியாணி சாப்பிட நினைத்தோம். பூரணி தனக்கு இரண்டே இரண்டு இட்லிகள் மட்டும் போதும் என்று கூறிவிட்டாள். அதனால் எல்லோருக்கும் நந்தண்ணன் இட்லி வாங்கி வந்தார்.

பூரணி சேலையை லேசாகத் தூக்கி இடுப்பில் செருகிக் கொண்டாள். குடத்திலிருந்த தண்ணீரைக் கொட்டி விட்டு அதை நன்றாகத் துலக்கி சுத்தம் செய்தாள். நாங்கள் அழுக்காக வைத்திருந்த, குடிநீரை சுத்தம் செய்யும் அக்குவா கார்டிலிருந்து குடத்தில் தண்ணீர் பிடித்து வைத்தாள். ஒரு தம்ளரை நன்றாகக் கழுவி குடத்தின் மூடியின் மேல் கவிழ்த்து வைத்தாள்.

அடுத்த கட்டமாக கழிப்பறையையும், குளியலறையையும் சுத்தம் செய்துவிட்டு, அதன்பின் சமையலறையை ஒழுங்கு-படுத்தினாள்.

அவளது திருக்கரங்களால் அதிர்ஷ்டசாலிகளான நூறு கரப்பான்-பூச்சிகளும், பத்து சிலந்திப்பூச்சிகளும் முக்தி அடைந்தன. ஒட்டடைகளை எடுத்து விட்டாள். படுக்கைகளையும், போர்வைகளையும் நன்றாக உதறித்தட்டி சுருக்கங்களின்றி விரித்து சரியாகப் போட்டு விட்டாள். நாளிதழ்களையும், புத்தகங்களையும், காலணிகளையும் அடுக்கி வைத்தாள்.

அவளே தனி ஒரு ஆளாக எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தது என் மனதை உறுத்தியது. மற்றவர்களுக்குத் தெரியாமல், அவளிடம், 'நான் ஏதாவது உதவி செய்யட்டுமா?' என்று கேட்டேன். 'வேண்டுமானால் கேட்கிறேன்' என்று கூறிவிட்டாள்.

தரையைப் பெருக்கி பின் துடைத்து விட்டாள். புதிய துடைப்பான் நிறம் மாறிவிட்டது. அத்தனை அழுக்கு. வீடு வித்தியாசமாக இருந்தது. 'இன்னும் மின்விசிறிகள் மட்டும்தான் பாக்கி. நீங்கள் எல்லோரும் நாளை வெளியே சென்றபின், நான் அவற்றைத் துடைத்து விடுகிறேன்' என்றாள் பூரணி.

பிரிட்ஜைத் திறந்தாள். துர்நாற்றம் வீசியது. 'இப்போது சுத்தம் செய்தால் உங்கள் எல்லோருக்கும் சிரமமாக இருக்கும். இதையும் நாளை சரி செய்து விடுகிறேன்.' என்றாள் பூரணி.

பரணிலிருந்து ஒரு சில புதிய தட்டுகளையும் கிண்ணங்களையும், கீழிறக்கினேன். பூரணி அவற்றைக் கழுவி, துடைத்து விட்டு, நந்தண்ணன் வாங்கி வந்திருந்த உணவை தட்டுகளில் பரிமாறினாள்.

'களைப்பாக இருக்குமே, நீங்களும் சாப்பிடலாமே' என்றேன்.

'பரிமாறி விட்டு, கடைசியாக சாப்பிடுகிறேன்' என்றாள் பூரணி.

சாப்பிட்டபின் பிசுக்கு பிடித்திருந்த பாத்திரங்கள் எல்லாவற்றையும் தொட்டியில் அம்பாரமாகக் குவித்துப் போட்டு தேய்த்து கழுவ ஆரம்பித்தாள்.

பத்தரைக்கு நாங்கள் படுக்கச் சென்றோம்.

பாவம், பூரணி எப்போது தூங்கினாளோ! அவளும் மனுஷிதானே?

நந்தண்ணன் 'சந்துரு, அலமாரி எல்லாவற்றையும் பூட்டி விட்டாயல்லவா? என்று ரகசியமாகக் கேட்டார்.

'ஆமாம்' என்றேன்.

ஆனால் நான் எதையும் பூட்டவில்லை. ஒரு பெண்ணை நல்லவள் என்று நான் நினைத்து அவளை நம்பியது தவறென்றால், எது வேண்டுமானாலும் நடந்து விட்டுப் போகட்டும்.



பூரணி ஊதுபத்தியை ஏற்றி வைத்தாள். வீட்டில் புதிய நறுமணம் எழுந்தது.

தூங்கிவிட்டேன். அன்று இரவு எறும்புகள் எதுவும் ஒரு முறை கூட கடிக்கவில்லை.

அதிகாலையில் படுக்கையறைக் கதவு லேசாக தட்டப்படும் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டேன்.

என்னருகே உறங்கிக் கொண்டிருந்த நந்தண்ணனை எட்டி உதைத்தாலும் எழுந்திருக்க மாட்டார். அவராக எப்போது எழுந்திருக்கிறாரோ அப்போதுதான் அவருக்கு நாள் ஆரம்பமாகும்.

பூரணியின் கைகளில் ஒரு தட்டு. தட்டில் தம்ளர்கள். தம்ளர்களில் சூடான காபி. காபியின் மணம் காலைப் பொழுதை சுறுசுறுப்பாக்கியது. 'மற்றவர்கள் எழுந்திருக்க இன்னும் ஒரு மணி நேரமாகும்' என்று சொல்லிக் கொண்டே ஒரு தம்ளரை எடுக்கப் போனேன்.

'பல் தேய்த்து விட்டு குடிக்கலாமே!' என்றாள் பூரணி.

'பழக்கமில்லை! சில சமயங்களில் பல் தேய்க்காமல் டிபன் கூட சாப்பிடுவோம்' என்றேன்.

'அய்யோ!' என்றவள், 'மற்றவர்களை எழுப்புங்களேன். மணி ஆறாகிறது!' என்றாள்.

'ஆறுதானே ஆகிறது!' என்றேன்.

சிறிது காபி குடித்தபின் கண் பார்வை தெளிந்தது. பூரணி குளித்து உடைகள் மாற்றியிருந்தாள். நேற்றை விடவும் இன்று அழகாக அவளிருப்பது போல் எனக்குத் தோன்றியது. அவள் முன்னால் நாங்கள் அழுக்காக இருப்பது போல உணர்ந்தேன்.

'நான் அம்பாள் உபாசகன் தினமும் நாலரைக்கே எழுந்து பூஜை தியானமெல்லாம் செய்ய ஆசைப்படுவேன். ஆனால் பெரும்பாலும் அசந்து நன்றாகத் தூங்கி விடுவேன்' என்று கூறி விட்டு காலி தம்ளரை அவள் கைகளில் தந்தேன்.

'நாளையிலிருந்து உங்களை நாலரை மணிக்கு காபியோடு எழுப்பி விடுகிறேன்' என்று கூறி விட்டு சமையலறைக்குள் நுழைந்து கொண்டாள்.

நான் தியானத்தை எட்டு மணிக்கு முடித்தபோது, லேசாகப் புரண்டு படுத்தார் நந்தண்ணன். என் அண்ணனும், தம்பியும் மருத்துவமனைக்குச் சென்று விட்டிருந்தனர்.

தோசையும், தக்காளி சட்னியும் செய்திருந்தாள். சாப்பிட்டு முடித்த பின்தான் நிறைய சாப்பிட்டு விட்டேனோ என்று தோன்றியது. 'நன்றாக இருந்தது' என்றேன்.

'நீங்கள் சாப்பிட்ட வேகத்தை பார்த்ததும் புரிந்தது' என்றாள்.

ஒரு வழியாக நந்தண்ணனும் என்னுடன் அலுவலகத்திற்கு கிளம்பினார். ஆளுக்கொரு உணவுப் பெட்டி தந்தாள்.

போகும் வழியில் நந்தண்ணன் கவலையோடு கேட்டார். 'ஏனப்பா, நாம் சாயந்தரம் திரும்பி வரும் போது வீடு இருக்குமா? ஒரு மாற்றுடையாவது எடுத்து வந்திருக்கலாமோ?'

நான் பதில் சொல்லவில்லை.

காலையில் தத்தா என்ற வெளியூர் இளைஞன் பயிற்சிக்காக அலுவலகத்தில் வந்து சேர்ந்தான். வசதியில்லாத நிலையில் படிக்க வேண்டும் என்ற தீவிர ஆர்வம் கொண்டவனாகத் தெரிந்தான்.

வாத்சல்யாவின் உதவியால் பயிற்சிக் கட்டணம் கட்டினான். பொய் சொல்ல விரும்பவில்லை என்று ஆழ்ந்து விரும்பினால் கடவுள் பொய் சொல்லும் வாய்ப்பையே தரமாட்டாராம். பிறருக்கு உதவ வேண்டும் என்று ஆழ்ந்து விரும்பினால் கடவுள் பிறருக்கு உதவும் வாய்ப்புகளை தந்து கொண்டே இருப்பாரோ!

மதியம் அலுவலகத்தில் உணவுப் பெட்டியைத் திறந்தபோது 'என்னப்பா ஊரிலிருந்து அம்மா வந்து விட்டாரா?' என்று அதிர்ச்சியுடன் கேட்டாள் மந்திரா.

மந்திரா என அப்பாவின் நண்பரின் செல்லப் பெண். அம்மா இல்லாத பெண் என்பதால் செல்லம் அதிகம். செல்லம் தந்தாலும் பொறுப்புடனும், அக்கறையுடனும் கவனித்துக் கொள்வார். நான் ஆடிட்டராக தொழிலை ஆரம்பித்ததும், தன் பெண்ணை என் அலுவலகத்தில் சேர்த்துவிட்டு, அவளை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளச் சொன்னார். நடந்ததோ வேறு. அவள்தான் என்னை நல்ல முறையில் கவனித்து வருகிறாள். அம்மா அரேபியா சென்றபின் மந்திரா தினமும் எனக்கும் சேர்த்து சமைத்து எடுத்து



வருவாள். காலையிலும். இரவிலும் எனக்கு சமைத்துக் கொடுக்க முடியவில்லையே என்ற கவலை அவளுக்கு உண்டு. சரியாக சாப்பிடவில்லை என்றால் திட்டித்திட்டி சாப்பிட வைப்பாள்.

'ஊரிலிருந்து உறவுப்பெண் வந்திருக்கிறாள். அவள்தான் கட்டாயப்படுத்தி உணவுப் பெட்டியை கையில் கொடுத்தனுப்பினாள்' என்றேன். பேசிக்கொண்டே வேகமாக சாப்பிட்டேன். அருமையான ருசி. எனக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா!

சமையல்காரி என்றால் விவரங்கள் கேட்பாள். என்னவென்று பதில் சொல்வது? எனக்கே விவரங்கள் தெரியாதே.

'எப்படி சொந்தம்?' என்று கேட்டாள் மந்திரா.

'ஏதோ தூரத்து சொந்தம்' என்றேன். உண்மையே பேசுவேன் என்று சொன்ன பெண்ணைப் பற்றி பொய் சொன்னேன். 'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறாரே! அவர் என்ன அர்த்தத்தில் எழுதினாரோ!

'எப்போது ஊருக்குப் போவாள்?' என்று கேட்டாள் மந்திரா.

'இன்றுதான் வந்திருக்கிறாள். அதற்குள் எப்போது போவாய் என்று கேட்க முடியுமா?' என்றேன்.

'பெண்கள் இல்லாத வீட்டிற்கு அவள் எதற்கு வந்தாள்? அவள் வீட்டுப் பெரியவர்கள் யோசிக்கும் திறனில்லாதவர்களா? அவரவர் இடத்தில் இருந்தால்தான் எல்லோருக்கும் நல்லது' என்றாள் மந்திரா,

'நீ சொல்வது சரிதான்' என்றேன்.

'என் பிரியதோழி மந்திரா மதிய சாப்பாடு கொண்டு வருவாள், அதனால் உணவுப் பெட்டி வேண்டாம் என்று சொல்லவேண்டியதுதானே?' என்று கேட்டாள்.

'அவள் கட்டித் தந்தது நன்றாகவே இல்லை. மீதி வைத்துவிட்டேன் பார். நீ கொண்டு வந்ததை கொடு' என்றேன்.

அதற்குப்பின்தான் மந்திரா கொஞ்சம் சமாதானமானாள்.

'நாளைக்கு எதுவும் வேண்டாம் என்று இன்றே சொல்லிவிடு, அலுவலக நாட்களில் இனி சாப்பாடு கட்ட வேண்டாம் என்றும் சொல்லிவிடு' என்றாள் மந்திரா.

‘சரி’ என்றேன்.

வெளியே சென்றுவிட்டு திரும்பிய தத்தாவைப் பார்த்தேன். முகம் சோர்ந்திருந்தது. ‘சாப்பிட்டாயா?’ என்று கேட்டேன். அரைகுறையாக தலையாட்டினான் தத்தா. அது பொய் என்று புரிந்தது.

‘நான் கொண்டு வந்த சாப்பாட்டை சுவைத்துப் பாரேன்’ என்று கூறி பூரணி தந்த உணவை நீட்டினேன். என் குரலிலிருந்த ஆணையை அவனால் மறுக்க முடியவில்லை.

சாப்பிட்டான். முகம் தெளிந்தது.

நான் மாலையில் வீடு திரும்பும் போது நேற்று இரவைவிட வீடு இன்னமும் பிரகாசமாக இருந்தது. பூரணி பளிச்சென்ற முகத்தோடு வரவேற்றாள். பிரிட்ஜைத் திறந்து குளிர்ந்த தண்ணீர் தந்தாள். பிரிட்ஜிலிருந்து நறுமணம் எழுந்தது. மின்விசிறிகள் சுத்தமாக இருந்தன.

‘டீ சாப்பிடுகிறீர்களா? அல்லது காபியா?’ என்று கேட்டாள்.

வெளியிலிருந்து என் வீட்டிற்குள் நுழையும் போது ஒரு பெண் மூடியிருக்கும் கதவுகளைத் திறந்துவிட்டு வாவென்று பிரியத்துடன் வரவேற்று உபசரிப்பது. மூடியிருக்கும் இதயக் கதவுகளை மனிதன் தட்டும்போது ஆன்மா அழைப்பை ஏற்று இதயக் கதவுகளைத் திறந்து வரம் தருவதற்கு சமானமானது என்று தோன்றியது.

‘டீ கொடுங்கள்’ என்றேன்.

‘பெயர் சொல்லி ஒருமையிலேயே அழைக்கலாம்’ என்றாள்.

‘ஒரிரண்டு பெண்களைத் தவிர வேறு எவரையும் பெயர் சொல்லி அழைத்தோ, ஒருமையில் விளித்தோ எனக்கு பழக்கமில்லை. அது மரியாதையுமில்லை’ என்றேன்.

‘நீங்கள் மதுரைப்பக்கமா?’ என்று கேட்டாள் பூரணி.

‘ஆமாம்’ என்றேன்.

சிரித்துக் கொண்டாள்.

டீ அருந்தும்போது, ‘உங்களுக்கு என்னவெல்லாம் சமைக்கத் தெரியும்?’ என்று கேட்டேன்.



‘உங்களுக்கும், மற்றவர்களுக்கும் என்னவெல்லாம் பிடிக்கும் என்று சொல்லுங்கள். அதையெல்லாம் சமைக்கிறேன்’ என்றாள் பூரணி.

மற்றவர்களும் வந்தபின் பஜ்ஜி தந்தாள். எல்லாமே எங்களுக்கு பிரமிப்பாக இருந்தது. இது புது வாழ்க்கை போலிருந்தது.

அன்று இரவு வேலைக்காரி வந்தாள். ‘சமையல்காரியை உடனே வேலையை விட்டு நிறுத்துங்கள்’ என்றாள்.

‘ஏன்?’ என்று கேட்டேன்.

‘எனக்கே உத்தரவு போடுகிறாள். துணியை இப்படித் துவை, அப்படித் துவை என்கிறாள். பாத்திரத்தை இப்படித் தேய், அப்படித் தேய் என்கிறாள் எவ்வளவு திமிர் இருந்தால் இப்படிச் சொல்ல மாட்டாள்?’ என்று உரத்த குரலில் பேசினாள் வேலைக்காரி.

நான் அவள் கூறிய எதையும் பொருட்படுத்தாமல் மௌனமாக இருந்தேன். என் மௌனத்தால் சீண்டப்பட்ட வேலைக்காரி மேலும் உரத்த குரலில் பேச ஆரம்பித்தாள்.

அறைக்குள் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்த அண்ணன் கூடத்திற்கு வந்தான். ‘ஏன் கத்துகிறாய்?’ என்று கோபமாக கேட்டான்.

‘சமையல்காரியை உடனே வேலையை விட்டு நிறுத்துங்கள்’ என்றாள் வேலைக்காரி.

‘எனக்கா உத்தரவு போடுகிறாய்? பூரணி இங்கேதான் இருப்பாள். இனிமேல் நீ வேலைக்கு வராதே!’ என்றான் அண்ணன்.

‘என்னது! அதெப்படி என்னை வேலையை விட்டு நிறுத்த முடியும்?’ அதிர்ச்சியுடன் கேட்டாள் வேலைக்காரி.

‘கிருஷ்ணா, கிருஷ்ணா!’ என்று காவல்காரனை அழைத்த அண்ணன், ‘இனிமேல் இந்த வேலைக்காரி நம் வளாகத்தில் நுழையக் கூடாது, யார் வேலைக்காரி, யார் வீட்டுக்காரர் என்று இந்தப் பெண்ணுக்குப் புரியவில்லை’ என்று கூறிவிட்டு அறைக்குள் சென்று விட்டான்.

‘சரி சரி, கிளம்பு கிளம்பு’ என்று அவளை மெல்ல விரட்டினான் கிருஷ்ணன்.

ஆத்திரத்துடன் என்னைப் பார்த்து வேலைக்காரி, 'என் சம்பளம்?' என்று கேட்டாள்.

'நீங்கள்தான் எனக்கு மூவாயிரம் ரூபாய் தர வேண்டும். முன்பணம் வாங்கி இருக்கிறீர்களே. காலாகாலத்தில் திருப்பி கொடுக்கும் வழியைப் பாருங்கள்' என்றேன்.

'உங்கள் அம்மா வெளிநாட்டிலிருந்து வரட்டும் அவரிடம் பேசிக் கொள்கிறேன்' என்று கூறிய வேலைக்காரி முணுமுணுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே போனாள்.

கூடத்தில் இத்தனை களேபரம் நடந்து கொண்டிருந்த போது அது தனக்கு சம்பந்தமில்லாதது போல பூரணி சமையலறையில் சப்பாத்தி செய்து கொண்டிருந்தாள்.

(வளரும்)

---

*கதைகளைப் பற்றியோ அல்லது பிறவற்றைப் பற்றியோ, சமர்ப்பணனுக்கு எழுத விரும்பும் நண்பர்கள், தங்கள் கருத்துக்களை* **cs@motherservice.org** *அல்லது* **contact@motherservice.org** *என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தமிழிலோ, ஆங்கிலத்திலோ அனுப்பலாம். அவர் பதில் எழுதுவார்.*

---

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**ஆன்ம விழிப்பு மனத்திலிருந்தால், மனம் மேதையாகத் தயாராகும் திறன் பெறும். முறையான வாழ்வு, நெறியான பழக்கம், கட்டுப்பாடான கொள்கையால் மனம் சிறந்தால் அது வாழ்வில் நிம்மதியான வளமாக வெளிப்படும். அதுவே உடலில் வெளிப்பட்டால், விலங்கின் இன உணர்வு மாறி, அமிர்த உணர்வை அளிக்கும். அன்னையிடம் அருள் பெற அருளுக்கு எல்லையில்லை. மனித வாழ்வின் இன்றைய மனப்போக்கால் வரையறை உண்டு.**

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# இனிமையான மறுப்பு
# வெறுப்பான உதவி

இனிமையாக இல்லை என்பவர்க்கு நல்ல பெயர். உதவியைச் செய்யும்பொழுது வெறுப்பாக நடப்பவருக்குக் கெட்ட பெயர். நாளாவட்டத்தில் உலகம் நல்லவரை நல்லவர் எனவும், கெட்டவரை கெட்டவர் எனவும் பிரித்து அறியும்.

- உள்ளம் நெகிழ்ந்த அளவு பழக்கம் பக்குவமாகாதது ஒருநிலை.
- உயர்ந்த பழக்கமும், தாழ்ந்த உள்ளமும் அரிபொருளாகச் சேர்ந்திருக்கும்.
- உள்ளம் நெகிழ, செல்வம் வளமாக இருக்க வேண்டும்.
- பழக்கம் பக்குவமாக பரம்பரை பண்புடையதாக இருக்க வேண்டும்.
- செல்வம், குடும்பம், பண்பு, பாரம்பரியம் விரும்பத்தக்கது.
- படிப்பில்லாத பணம், பணமில்லாத மனம், எதுவுமில்லாத இனிமை சகஜம்.
- அன்பருக்கு எது இல்லையென்றாலும் எது வேண்டுமென்றாலும் அன்னையிடம் கேட்டுப் பெறலாம் எனத் தோன்றுவது அரிது. தோன்றினால், கேட்டால் பெறலாம்.
- உலகம் 100 ஆண்டில் 5 தலைமுறைகளில் பெறுவதை அன்பர் 100 மாதத்தில் 100 நாளில் பெறலாம்.
- கேட்கத் தோன்றாது, பெறத் தோன்றாது. தோன்றினால் செய்ய மாட்டார்கள். தோன்றி, கேட்டு, செய்தால், வரும் பலன் சிறு முயற்சிக்குண்டு.

# கனமான எழுத்து

The Life Divine கனத்த கருத்தை சுமந்து வரும் செறிந்த எழுத்து. அன்பரல்லாத குடும்பத்து எளிய சூழலில் ஒருவர் The Life Divine-ஐ டைப் அடிக்க முயன்றால் கரண்ட் நின்று விடும். கரண்ட் வந்த பின்னர் அடிக்கலாம் என்று எதிர்பார்க்கும்வரை கரண்ட் வாராது. டைப் செய்ய வேண்டாம் என நினைத்தால் உடனே கரண்ட் வரும். 7-ஆம் மடம் காலியானவர் தரித்திரம் அவர் குடும்பத்தை அழிக்கும். போகுமிடமெல்லாம் அதையே செய்யும். அவரிடம் The Life Divine-ஐப் பற்றிப் பேச ஆரம்பித்தால் தெருவில் விபத்து நடக்கும். அடுப்பங்கரையில் துணி பற்றி எரியும். அன்பரிடம் The Life Divine-ஐ அடிக்கச் சொன்னால் தினமும் 1 மணி டைப் செய்ய முடிவு செய்தால், தினமும் 3 மணி power cut 2 மணியாகக் குறையும். தொடர்ந்து டைப் செய்தால் 1 மணியாகி முடிவாக power cut விலகும். அருளை பவர் ஏற்றால் power cut போகும்.

- அருளை மனம் ஏற்றால் முகம் பிரகாசமாகும்.
- உடல் ஏற்றால் உடல் புளகாங்கிதமடையும்.
- குடும்பம் ஏற்றால் சுமுகம் பெருகும்.
- ஆத்மா ஏற்றால் The Life Divine புரியும்.
- ஏற்பவர் ஏற்றமடைவர்.